ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைபண்புகளை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர் ஆவார்கள் பக்கம் 3

ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் (தொடர்–3) பக்கம் 11

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை – இறைவன் பக்கம் அழைத்தல் என்பதன் ஒளியில் பக்கம் 16

இறையிருப்பு அல்லாஹ்வின் இருப்பின் மீது நம்பிக்கை கொள்வதன் பலன்களும் அதில் உள்ள அருள்களும் (தொடர்ச்சி...) பக்கம் 21


மாத இதழ்

# ....நுபுவ்வத் வழி....

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | September 2024 | Vol. 3 - Issue No. 10

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311





# திருக்குர்ஆன்

اَلنَّبِىُّ اَوۡلٰى بِالۡمُؤۡمِنِيۡنَ مِنۡ اَنۡفُسِهِمۡ
وَاَزۡوَاجُهٗۤ اُمَّهٰتُهُمۡ‌ؕ وَاُولُوا الۡاَرۡحَامِ
بَعۡضُهُمۡ اَوۡلٰى بِبَعۡضٍ فِىۡ كِتٰبِ اللّٰهِ مِنَ
الۡمُؤۡمِنِيۡنَ وَالۡمُهٰجِرِيۡنَ اِلَّاۤ اَنۡ تَفۡعَلُوۡۤا
اِلٰٓى اَوۡلِيٰٓـئِكُمۡ مَّعۡرُوۡفًا‌ ؕ كَانَ ذٰلِكَ
فِى الۡكِتٰبِ مَسۡطُوۡرًا

நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவர்களின் உயிர்களை விட நபி மிக நெருக்கமானவராவார். அவருடைய மனைவியர் அவர்களின் தாய்மார்கள் ஆவார்கள். மேலும் நம்பிக்கையாளர்கள் மற்றும் இடம் பெயர்ந்து வந்தவர்கள் ஆகியோரை விட அல்லாஹ்வின் வேதத்தின் அடிப்படையில் இரத்த உறவினர்களில் சிலர் சிலரை விட மிகவும் நெருங்கியவர்கள் ஆவர். ஆனால் உங்கள் நண்பர்களுடன் நன்முறையில் நீங்கள் நடந்து கொள்வது நல்லது. இது(வும்) வேதத்தில் எழுதப்பட்டதாகும். (33:7)



# ஹதீஸ்

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ قَالَ قَالَ رَسُولُ اللهِ
صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لاَ يُؤْمِنُ أَحَدُكُمْ
حَتَّى أَكُونَ أَحَبَّ إِلَيْهِ مِنْ وَلَدِهِ وَوَالِدِهِ
وَالنَّاسِ أَجْمَعِينَ

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக நேசத்திற்குரியவராகும் வரை அவர் (உண்மையான) இறைநம்பிக்கையாளராக மாட்டார்.” (புகாரி ஹதீஸ் எண். 15)

# ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைபண்புகளை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர் ஆவார்கள்




**அப்துஸ் ஸமீ கான் சாஹிப் (பேராசிரியர், ஜாமிஆ அஹ்மதிய்யா, கனடா)**

தமிழாக்கம்: மவ்லவி ஸாஹிர் ஹுஸைன்

அருளுக்குரிய ரமலான் 20, ஹிஜ்ரி 8 வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளாகும். நம்முடைய தலைவரும், எஜமாருமான ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.்பா (ஸல்) அவர்கள் 10,000 பரிசுத்தவான்களின் கூட்டத்துடன் வெற்றிவாகை சூடியவாறு கண்ணியத்திற்குரிய மக்காவில் நுழைந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கஅபா ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சிலைகளைக் கீழே விழ வைத்துக் கொண்டே சென்றார்கள்.

وَقُلْ جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ ۚ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا

உண்மை வந்து விட்டது. பொய் வெருண்டோடியது. நிச்சயமாகப் பொய் வெருண்டோடக் கூடியதே ஆகும். (17:82)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இங்கு உண்மை என்பதன் பொருள் அல்லாஹ்வும் ஆவான். கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களும் ஆவார்கள். திருக்குர்ஆனும் ஆகும். இறைவன் தனது பெயரில் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இணைத்துக் கொண்டான். ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்புகளை முழுமையான முறையில் வெளிப்படுத்துபவராக இருந்தார்கள். (சுர்மா சஷ்மா ஆர்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 2, பக்கம் 278)

அல்லாஹ் முழு உண்மையாக இருக்கிறான் எனும் போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதன் முழு முன்மாதிரி ஆவார்கள். முழு சமுதாயமும், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அன்னார் வாதம் புரிவதற்கு முன்பும் வாதம் புரிந்த பின்பும் உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் என்று ஒருமனதாகக் கூறி வந்தது. இந்தக் கண்ணியம் இவ்வளவு மேன்மையுடன் வேறு எந்த ஒரு நபிக்கும் கிடைக்கவில்லை.

உண்மை என்னவெனில், அல்லாஹ் ஒரு மறைவான கருவூலமாக இருந்தான். அவன், தான் அறியப்பட வேண்டும் என விரும்பினான். எனவே, அவன் தன்னுடைய பண்புகளை வெளிப்படுத்துபவனாகத் திகழ வேண்டும் என்பதற்காக மனிதனைப் படைத்தான். ஓர் அறிவிப்பின்படி, 10 இலட்சம் நபிமார்கள் வந்தார்கள். அவர்கள் இறைபண்புகளின் வெளிப்பாட்டைக் காண்பித்தார்கள். ஆனால், வரையறுக்கப்-பட்ட ஏற்பாடுகளுடன், வரையறுக்கப்பட்ட காலத்திற்காக, வரையறுக்கப்பட்ட சமுதாயங்களுக்காக (இருந்தார்கள்).

எல்லாருக்கும் பிறகு, இறைவன் முழுமையான மனிதரை, உலகளாவிய நபியை மற்றும் இறைவனை வெளிப்படுத்தக் கூடிய தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை அனுப்பினான். அன்னார் இறை பண்புகளின் முழுமையான வெளிப்பாடாகத் திகழ்ந்தார்கள். அன்னார் அனைத்து நபிமார்களின் மேன்மை மற்றும் அருள்களை ஆயிரம் மடங்குகள் அதிகமாகக் கொண்டு வந்தார்கள். அன்னாரைப் பற்றி இன்றிலிருந்து 3500 ஆண்டுகளுக்கு முன்பு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இவ்வாறு முன்னறிவிப்பு செய்திருந்தார்கள்:

“சீனாய் (மலை)யிலிருந்து கர்த்தர் வந்தார். சேயீரிலிருந்து அவர்கள் மீது உதித்தார். ்பாரான் மலையிலிருந்து வெளிப்பட்டார். 10,000 பரிசுத்தவான்களுடன் தோன்றினார். அவருடைய வலக்கரத்தில் அவர்களுக்காக ஒரு மகத்தான மார்க்கச் சட்டம் இருந்தது.” (உபாகமம் அதிகாரம் 33 வசனம் 2)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அதாவது, இறை வெளிப்பாடு மூஸா, ஈஸாவின் வழியாக வந்து, ்பாரானுடைய மலைகள், அதாவது, ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்த.்பா (ஸல்) அவர்களது இயல்பில் முழுமையை எட்டும். (சுர்மா சஷ்மா ஆரியா, ரூஹானி கஸாயின் தொகுதி ... பக்கம் 280)

வாருங்கள்! அவற்றின் சில காட்சிகளைக் காண்போம். சூரா ்பாத்திஹாவில் பதியப்பட்டுள்ள அல்லாஹ்வின் நான்கு அடிப்படைப் பண்புகளிலிருந்து துவங்கலாம்.

முதல் பண்பு, ***ரப்புல் ஆலமீன்*** ஆகும். அதாவது, அல்லாஹ் மெதுமெதுவாக முன்னேற்றம் அளித்து முழுமையை எட்ட வைக்கிறான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் மனிதம், குறிப்பாக, அரேபியர்-கள் ஆன்மிகத்தையும், நல்லொழுக்கங்களையும் முற்றிலும் அறியாதவர்களாக இருந்தனர். கண்ணியத்திற்-குரிய தூதர் (ஸல்) அவர்கள் தாயைப் போன்று அவர்களுக்கு ஆன்மிகப் பாலைக் கொடுத்தார்கள். காட்டுமிராண்டிகளை மனிதர்களாக்கினார்கள். மனிதர்களை நல்லொழுக்கம் கொண்ட மனிதர்களாக ஆக்கினார்கள். பிறகு அவர்களை இறைவனை வெளிப்படுத்துபவர்களாக ஆக்கி விட்டார்கள். எனவேதான், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:



اَللّٰهَ اللّٰهَ فِيْ اَصْحَابِيْ ‘என் சஹாபாவில் உங்களுக்கு இறைவன் மட்டுமே தென்படுவான்.’ (ஜாமி∴ திர்மிதி, கிதாபுல் மனாகிப். பாபு ∴பீ மன்ஸபி அஸ்ஹாபின் நபிய்யீ ஹதீஸ் எண் 3862)

எனவே, ரப்புல் ஆலமீனாகிய இறைவன் அன்னாருக்கு ரஹ்மத்துல் லில் ஆலமீன் என்கின்ற நிரந்தரமான பட்டத்தை வழங்கினான்.




***ரஹ்மான்*** என்பதன் பொருள் கேட்காமல் வழங்குபவன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதர்களுக்கு அவர்கள் கேட்காமலையே திருக்குர்ஆன் போன்ற ஷரீஅத்தையும், சுன்னத் போன்ற அருட்கொடையையும் வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

اَلرَّحْمٰنُ ۙ عَلَّمَ الْقُرْاٰنَ ؕ ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாக உலகிற்குத் திருக்குர்ஆனைக் கற்றுத் தந்த அந்த இறைவன் அளவற்ற கருணையாளன் ஆவான். (55:1-2) (அன்னார்) உயர்ந்த நற்பண்புகளைக் கற்றுக் கொடுத்தார்கள். அவற்றை உச்சம் வரை எட்டச் செய்து விட்டார்கள். وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ நீர் உயர்ந்த நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர் என்று இறைவன் சாட்சி பகர்ந்தான். (68:5)




***ரஹீம்*** என்பதன் பொருள் கடின உழைப்பிற்குக் கூலி தருபவன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள ் சஹாபாவின் சின்னச் சின்ன தொண்டுகளுக்கு நிகரற்ற வெகுமதியை வழங்கினார்-கள். அரேபியாவின் அறியப்-பட்டிருக்காத மக்களை விண்ணின் நட்சத்திரங்களாக மாற்றி விட்டார்கள். நூற்றுக்கணக்கான சஹாபாவுக்கு சொர்க்கத்திற்கான நற்செய்திகளை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீ∴பா ஆனபோது அன்னாரின் தந்தை அரேபியாவின் எல்லாக் கோத்திரங்களும் அன்னாரைத் தம் தலைவராக ஏற்றுக் கொண்டன என்பதை நம்ப ஆயத்தமாக இல்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை ஹஜ்ஜிலிருந்து திரும்பும் வழியில் ஒரு பாழடைந்த பகுதியில் நின்று, ஒரு கல்லின் மீது அமர்ந்து அழத் துவங்கினார்கள். பிறகு, “நான் என் தந்தையுடைய ஒட்டகங்களை இங்குதான் மேய்த்து வந்தேன். ஒருநாள் இரவு தாமதமானதால் என் தந்தை எனக்கு தண்டனை வழங்கினார். இன்று முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காரணமாக எனது வியர்வைக்குப் பதிலாக ஆயிரக்கணக்கான மக்கள் இரத்தம் சிந்த ஆயத்தமாக இருக்கிறார்கள்” என்று கூறினார்கள். அந்த உயர்ந்தவரும், படித்தரங்களை உயர்த்துவதன் வெளிப்பாடுமான அந்த மாமனிதர் (ஸல்) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களை ஸுன்நூரைன் (இரண்டு ஒளிகளுக்கு சொந்தக்காரர்) ஆகவும், அலீ (ரலி) அவர்களை காத்தமுல் அவ்லியா (இறைநேசர்களின் முத்திரை) ஆகவும் ஆக்கி விட்டார்கள்.

ஓர் ஏழை சஹாபி ஸாஹிர் பின் ஹராம் (ரலி) அவர்கள் கிராமத்திலிருந்து காய்கறிகளைக் கொண்டு வந்து மதீனாவில் விற்று வந்தார்கள். ஆனால், அருவருப்பான தோற்றம் கொண்டிருந்ததனால் மக்கள் அவர்களிடம் குறைவாகவே வந்து கொண்டிருந்தார்கள். ஒருநாள் மதிய வேளையில் அவர்கள் வியர்வையால் முழுவதும் நனைந்தவாறு சந்தையில் இருக்கும் பொழுது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பக்கமாகக் கடந்து சென்றார்கள். அன்னார் பின்புறமாக வந்து மிகவும் அன்புடன் அவர்களுடைய கண்களில் கையை வைத்துக் கொண்டு, ‘நான் யார் என்று கூறுங்கள் பார்ப்போம்?...’ என்று கேட்டார்கள். ஸாஹிர் இந்த நபர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவராகவும் இருக்க முடியாது என்று அகப்பார்வையால் கண்டு கொண்டார்கள். அவர்கள் அன்பின் மிகுதியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் தமது உடலைத் தேய்க்கத் துவங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பரிவு மிகுதி இன்னும் ஓர் அடி முன்னால் எடுத்து வைத்தது. மேலும், ‘என் அடிமை ஒருவர் இருக்கிறார். அவரை யார் விலைக்கு வாங்குவார்?’ என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னை யார் வாங்குவார்?’ என்று கேட்டார்கள். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அப்படிக் கூறாதீர். அர்ஷின் இறைவன் உம்மை வாங்குபவன் ஆவான். (ஷமாயிலுத் திர்மிதீ பாபு ∴பீ ஸி∴பத்தி முஸாஹி ரஸூலில்லாஹ்)

(நீர்த்) துளிகளை இணைத்து நதியை
உருவாக்கியவர் எவர்!

(மண்) துகள்களை எடுத்து பாலைவனம்
ஆக்கியவர் எவர்!

அநாதைகளை முத்துகளாக ஆக்கியது
எவரது நுட்ப ஞானம்!

அடிமைகளை எல்லாக் காலங்களுக்கும்
எஜமானர் ஆக்கியவர் எவர்!




அன்னார் மூலம் இறைவனின் ***மாலிக்கி யவ்மித்தீன்*** (மறுமை நாளின் எஜமானன்) என்ற பண்பும், மாலிக்குல் முல்க் (அரசர்களுக்கெல்லாம் அரசன்) என்ற பண்பும் வெளிப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் மார்க்கத்தின் அரசரும் ஆனார்கள். உலகத்தின் அரசரும் ஆனார்கள். எந்த மக்காவிலிருந்து அன்னார் இரவு ஒளிந்து ஒளிந்து வெளியேறினார்களோ, அங்கு பகல் வெளிச்சத்தில் அரசராக வந்தார்கள். உங்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுங்கள் எனக் கேட்டார்கள். இதனால்தான் ஹஸ்ரத் எசாயா (அலை) அவர்கள் அன்னாரது பெயரை வல்லமை படைத்த இறைவன் மற்றும் நிரந்தரமான தந்தை என்று வைத்தார்கள். (ஏசாயா அதிகாரம் 9 வசனங்கள் 6-7)

பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் பண்புகளான **அஃப்வு** (மன்னிப்பவன்) மற்றும் **கஃபூர்** (திரையிடுபவன்) ஆகியவற்றின் எத்தகைய காட்சிகளைக் காட்டினார்கள் என்றால், அதற்கு நிகர் நபிமார்களின் வரலாற்றிலும் மனிதகுலத்தின் வரலாற்றி -லும் காணக் கிடைப்பதில்லை.




ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்கள் 'லா தஸ்ரீப அலைக்கும்' என்று கூறி தம் உடன் பிறந்த சகோதரர்களை மன்னித்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவில் தம் உயிருக்கு எதிரிகளாக இருந்தவர்களை மன்னித்து விட்டார்கள். தம் மகள் ஸைனப் (ரலி) மற்றும் தம் தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைக் கொன்றவர்களை மன்னித்து விட்டார்கள். அபூஜஹ்லின் மகன் இக்ரிமாவை மன்னித்து அவரை அவரது மார்க்கத்திலேயே மக்காவில் இருக்க அனுமதியளித்தார்கள். அப்பொழுது அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இன்று வரை நான் தங்களை எதிர்ப்பதில் என்னுடைய எவ்வளவு செல்வத்தையும் நேரத்தையும் செலவு செய்தேனோ, இனி நான்அல்லாஹ்வின் வழியிலும் அதை விட இரண்டு மடங்கு செலவு செய்வேன்' என்று கூறினார். அவர், 'முஸ்லிம்கள் என்னை இஸ்லாத்தின் எதிரியின் மகன் என்று கூறுகிறார்கள்' என்று முறையிட்டார். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதையும் தடுத்து விட்டார்கள்.




விஷம் தந்த யூதப் பெண்ணை மன்னித்து விட்டார் -கள். தனிமையில் அன்னாரது வாளை எடுத்து, 'என் கையில் இருந்து உம்மை யார் காப்பாற்றுவார்?' என்று கூறிய மனிதரையும் மன்னித்து விட்டார்கள். நம்பிக்கையாளர் -களின் தாயாரான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்திய முனாஃபிக்களின் தலைவனான அப்துல்லாஹ் இப்னு உபை இப்னுஸூலுலின் மகனுக்குத் தன் தந்தையைக் கொல்ல அனுமதி அளிக்கவில்லை. சஹாபா தடுத்தும் அவருக்கு ஜனாஸா தொழ வைத்தார்கள். இப்படிப்பட்ட மன்னிப்புக்கான உதாரணம் நபிமார்களிட(மு)ம் கிடைப்பதில்லை.

**ஸலாம்** எனும் பண்பின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் உலகிற்கு இஸ்லாம் போன்ற மார்க்கத்தை அளித்தார்கள். மேலும், 'நீங்கள் அறிந்தவருக்கும் அறியாதவர்க்கும் சலாத்தை தெரிவியுங்கள்' என்று கூறினார்கள்.




ஹுனைன் போரின் பயணத்தில் ஒரு நபர் மிகவும் கடினமான காலணி அணிந்திருந்தார். அவருடைய கால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கால் மீது பட்டு விட்டது. அன்னாருக்கு பயங்கரமான துன்பம் ஏற்பட்டது. அன்னார் ஒரு தடியை வைத்து அந்த நபரை விலக்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் துன்பத்தை இழைத்து விட்டோமே என்ற எண்ணத்தில் அந்த சஹாபி வெட்கம் அடைந்திருந்தார்கள். ஆனால், அடுத்த நாள் காலையில் அவரை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரவழைத்தார்கள். அவருக்கு 80 ஆடுகளை வழங்கி, நான் உங்களுக்கு அளித்த அந்தத் துன்பத்திற்கு இது பகரமாகும் என்று கூறினார்கள். (சுனன் அத்தாரமீ. அல் முகத்தமா: பாபு ஃபீ ச ஃஹாயின் நபிய்யீ ஹதீஸ் எண் 73)




**முஃமின்** என்கின்ற பண்பின் பொருள் சமாதானத்தை வழங்கக் -கூடியவன். இதன் அடிப்படையில், ஹுஸூர் (ஸல்) அவர்கள் மக்கா மற்றும் மதீனாவை சமாதான நகரமாக ஆக்கினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கஅபா ஆலயத்திற்குள் வந்து விடும் எதிரியும் அமைதியில் இருப்பார். பிலாலின் கொடிக்குக் கீழ் வருபவரும் அமைதியில் இருப்பார். தன் வீட்டிலேயே அமர்ந்திருப்பவரும் அமைதியில் இருப்பார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தம்மைப் பிடிக்க வந்த சுரக்காவிற்கும் உயிருக்கு உத்தரவாதம் வழங்கினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்களின் வெளிப்பாட்டினாலேயே காதியான் அமைதியின் இல்லம் என்று அழைக்கப்பட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத் முழு உலகிலும் அமைதியை நிலைநாட்டுவதற்கு மும்முரமாக பணி செய்து வருகிறது. அதன் தலைவர் அமைதியின் தூதுவர் என அழைக்கப்படுகிறார்.

நம் அல்லாஹ் அனைத்து அழகிய பண்புகளும் கொண்டவனும், அனைத்து இழிவானற்றிலிருந்தும் தூய்மையானவனும் ஆவான். மனிதர்களில் நம் எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கும் இதே (மேலான) அந்தஸ்துதான் உள்ளது. ஹுதைபிய்யா சந்தர்ப்பத்தின்போது மக்காவாசிகள் அன்னாரை உம்ரா செய்ய விடவில்லை. கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா இடத்தில் குர்பானி செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அவற்றிற்கான இறைச்சியை அன்பளிப்பாக மக்காவாசிகளுக்கும் அனுப்பி வைத்தார்கள்.




பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வளவு ***ரஊஃபுர் ரஹீம்*** இரக்கமும் கருணையும் உள்ளவராக இருந்தார்கள். சில கம்பளிகள் வந்ததும், அன்னார் (ஸல்) சஹாபாவுக்குப் பங்கிட்டு வழங்கி விட்டார்கள். ஒரு பார்வையற்ற சஹாபிக்குத் தாமதமாகத் தெரிய வந்த போது, அவர்கள் அவநம்பிக்கை அடைந்த நிலையில் வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்காக ஒரு கம்பளி எடுத்து வெளியே வந்து, 'நான்

உமக்காக ஒரு போர்வையை ஒளித்து வைத்திருந்தேன்' என்று கூறினார்கள். ஒருமுறை ஒரு ஆடு அறுக்கச் செய்து, அதன் ஈரலை நெருப்பில் சுடுமாறு கட்டளை இட்டார்கள். ஆயத்தமானபோது சுயமே அனைவருக்கும் பங்கிட்டு அளித்தார்கள். அங்கு இல்லாத சஹாபிகளுக்கான பங்கைத் தனியாகப் பாதுகாத்து வைத்து விட்டார்கள். (முஸ்லிம்)




அன்னார் எத்தகைய **ஷாகிர்** மற்றும் **ஷகூர்** நன்றி செலுத்துபவராக இருந்தார்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) ஆகியோரின் தொண்டுகளையும் தியாகங்களையும் எப்பொழுதும் நினைவுகூர்ந்து வந்தார்கள். தாயி∴ப் சம்பவத்திற்குப் பிறகு முத்இம் பின் அத்தீ ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு மக்காவில் தஞ்சமளித்திருந்தார். ஆனால், கு∴ப்ருடைய நிலையிலேயே வ∴பாத்தாகி விட்டார். பத்ரின் வெற்றியின் போதும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அது நினைவிருந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இன்று முத்இம் பின் அத்தீ உயிரோடு இருந்து, இந்த 70 கைதிகளை விடுவிக்குமாறு பரிந்துரை செய்திருந்தால், நான் அவர்கள் அனைவரையும் விடுவித்திருப்பேன்.

மனிதர்களுக்கு நன்றி செலுத்துவதிலும் எல்லையை எட்டியிருந்தார்கள். இறைவனுக்கு நன்றி செலுத்துவதிலும் எல்லையை எட்டியிருந்தார்கள். முழு இரவும் பாதங்கள் வீங்கி விடும் அளவிற்கு தஹஜ்ஜுத் தொழுகையில் நிற்பார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், 'அல்லாஹ் தங்களுடைய முன் பின் அனைத்துப் பிழைகளையும் மன்னித்து விட்டானே! பிறகு தாங்கள் இவ்வளவு இறைவணக்கம் ஏன் செய்கின்றீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள்? 'நான் என் இறைவனுக்கு நன்றி உடைய அடியானாக ஆக வேண்டாமா?' எனக் கேட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் **அவ்வல்** முதலாகவும் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் ஒவ்வொரு விஷயத்திற்கும் முன்பு எனது ஒளியைப் படைத்தான்.

اَوَّلَ مَا خَلَقَ اللّٰهُ نُوْرِیْ அல்லாஹ் அனைத்திற்கும் முன்பாக எனது ஒளியைப் படைத்தான். (ஷர்ஹுல் மவாஹிப். லித்துன்யா ஸர்கானீ தொகுதி 1 பக்கம் 27. தாருல் ம∴ரி∴பத் பைரூத். 1993)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆதம் படைப்பின் நிலைகளைக் கடந்து கொண்டிருந்த அந்த நேரத்தில் இருந்து, நான் காத்தமுன் நபிய்யீனாக இருந்தேன். (திர்மிதி கிதாபுல் மனாகிப் பாபு ∴பீ ∴பஸ்லின் நபிய்யீ)


பெருமானார் (ஸல்) அவர்கள் **ஆகிர்** இறுதியாகவும் இருந்தார்கள். ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய இறுதியான ஷரீஅத்தைக் கொண்டு வந்தார்கள் என்றால், அதற்குப் பிறகு எந்த ஒரு ஷரீஅத்தும் எந்த ஒரு மார்க்கச் சட்டமும் இல்லை.

اِنِّیْ اٰخِرُ الْاَنْبِیَآءِ وَمَسْجِدِیْ اٰخِرُ الْمَسَاجِدِ

நான் எல்லா நபிமார்களுக்கும் இறுதியானவன் ஆவேன். எனது இந்தப் பள்ளிவாசல் எல்லாப் பள்ளிவாசல்களுக்கும் இறுதி பள்ளிவாசல் ஆகும். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஹஜ். பாபு ∴பஸ்லிஸ் ஸலாத்தி பிமஸ்ஜிதீ ஹாஸா ஹதீஸ் எண் 2471)

அவரது தூய இருப்பில் ஒவ்வொரு மேன்மையும் தனது முழுமையை எட்டி விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் மற்ற அனைத்து நபிமார்களுடைய அருள்களையும் முடிவு பெறச் செய்து விட்டார்கள்.

ختم شد بر نفس پاکس ہر کمال----لا جرم شد ختم ہر پیغمبرے



அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் **நூர்** ஒளி ஆவான். அல்லாஹ் தனது ஒளிக்கான உதாரணத்தை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய தூய நெஞ்சம் மற்றும் தூய உள்ளத்தால் தந்துள்ளான். பெருமானார் (ஸல்) அவர்கள் தமது ஒளியால் அரேபியர்களை எவ்வாறு மாற்றினார்கள்! ஜவேளை மதுவின் இருளில் தடம் புரண்டவர்கள் ஐவேளை ஏக இறைவனின் இறைவணக்கத்தின் மூலம் ஒளி பெறத் துவங்கினார்கள். ஆடலும் பாடலும் கண்டு களித்த அவர்கள் திருக்குர்ஆன் ஓதுதல் மூலம் இன்பத்தைத் பெறத் துவங்கி விட்டார்கள்.

ஒரு பிரபலமான கவிஞர் லபீத் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'உங்களுடைய புத்தம் புதிய சில கவிதைகளை அனுப்பி வையுங்கள்' என்று எழுதினார்கள். அதற்கு அவர்கள் சூரா பகராவின் சில வசனங்களை எழுதி அனுப்பி, 'திருக்குர்ஆனைக் கேட்டதிலிருந்து கவிதை எழுதுவதை விட்டு விட்டேன்' என்று பதில் அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களை ஷஹீதாக்கிய வஹ்ஷீ என்பவர் இஸ்லாத்தின் அப்போதைய மிகப்பெரிய எதிரியான முஸைலமா கஸ்ஸாபை கொன்ற பிறகுதான் நிம்மதி பெருமூச்சு விட்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உலகை இருளில் கண்டு, அதற்கு உண்மையிலேயே, இருளான இரவைப் பகலாக மாற்றிய அந்த ஒளியை வழங்கினார்களே! அந்த ஒளியே உலகின் உண்மையான ஒளியாகும். (குலாம் அஹ்மத் காதியானி - தொகுதி 1 பக்கம் 407)

விண்ணில் இருந்து ஒளியைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் தாமும் ஓர் ஒளியாக இருந்தார்கள்....... காட்டுமிராண்டிகளான சமுதாயத்தில் பிறந்தார்கள் என்றால், அது என்ன வெட்கத்திற்குரிய விஷயம்? காட்டுமிராண்டியை மனிதனாக ஆக்குவது ஓர் அற்புதம் ஆகும்.......

நுபுவத்தின் இரகசியத்தின் பொருள் அவர்களிடமிருந்து வெளிப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்புகளான **ஹமீது** மற்றும் **மஜீது** ஆகியவற்றையும் முழுமையாக வெளிப்படுத்துபராகத் திகழந்தார்கள். அல்லாஹ் அர்ஷிலிருந்து அன்னாரைப் புகழ்ந்தான். எனவே,

பெருமானார் (ஸல்) அவர்கள் முஹம்மத் என்று அழைக்கப் -பட்டார்கள். வானவர்களும் அன்னாருக்காக துஆக்கள் செய்கிறார்கள். கோடிக்கணக்கான நம்பிக்கையாளர்கள் அன்னாருக்காக உயிரைத் தியாகம் செய்ய எந்நேரமும் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

இந்த பூமியில் 24 மணி நேரத்தில் ஒரு நொடிப் பொழுது கூட ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது தரூத் அனுப்பப்படாமல் இருப்பதில்லை.


அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின். வ அலா ஆலி முஹம்மத்.

இது எத்தகைய மகாமே மஹ்மூத் (புகழுக்குரிய இடம்) எனில், இது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

ஒரு ஹிந்து கவிஞர் எழுதுகிறார்:

ஒருவருக்கு யார் மீது வேண்டுமானாலும் அளவுக்கு
அதிகமான நேசம் ஏற்படலாம், அது ஒன்றும்
அவரது கட்டுபாட்டில் இல்லையே!

முஸ்லிமுக்கு மட்டும் முஹம்மத் (ஸல்) அவர்கள்
சொந்தமில்லையே! (அதாவது, யார் வேண்டுமானாலும்
அன்னாரை நேசிக்கலாமே!)




பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்பான **அஹத்** ஒருவன் என்பதன் வெளிப்பாடாகவும் இருந்தார்கள். தமது படித்தரம் மற்றும் உயர்த்தரத்தின் அடிப்படையில் நிகரற்றவராக இருந்தார்கள். அன்னாரைப் போன்ற ஒருவர் முன்பும் இருந்ததில்லை. பின்னரும் இருக்கப் போவதுமில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனுக்கு எந்த அளவுக்கு நெருக்கமானார்கள் என்றால், மி∴ராஜ் எனும் ஆன்மிகப் பயணத்தில், அனைத்து நபிமார்கள், வானவர்கள் கீழ் வானத்தில் நின்று விட்டார்கள். ஆனால், முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் படைப்பினங்களின் எல்லை முடிந்து போய், இறைமையின் எல்லைத் துவங்கிய அந்தப் பகுதியை சென்றடைந்து விட்டார்கள். ஆகையால் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

شان احمد را کہ داند جزخداوند کریم-----
آنچناں از خود جدا شد کز میاں افتاد میم

அஹ்மத் (ஸல்) அவர்களின் மேன்மையை இறைவனை அன்றி வேறு எவர் அறிய முடியும்! அவர் தன் சுயத்திலிருந்து எவ்வாறு அகன்று போனார் என்றால், மீம் மத்தியில் இருந்து அகன்று احمد என்பதற்குப் பதிலாக احد மட்டுமே எஞ்சியிருந்து விட்டது. (குறிக்கோள் பற்றிய விளக்கம் ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 62)

பெருமானார் (ஸல்) அவர்கள் **கனீ** தன்னிறைவு பெற்றவராகவும் இருந்தார்கள். இறைவன் அன்னாரை ஏழ்மையான நிலையையும் கடக்கச் செய்தான். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் எவரிடமும் எதுவும் வேண்டியதில்லை. இறைவன் அன்னாருக்கு அளவற்ற செல்வங்களையும் வழங்கினான். ஆனால் அன்னார் அனைத் -தையும் இறைவழியில் வழங்கி விட்டார்கள். (பராஹீனே அஹ்மதிய்யா ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 108)

பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுடைய இந்தத் தன்னிறைவு பெற்றவர் எனும் பண்பு ஹுனைன் போரில் அன்னார் தன்னந்தனியாக முன்னேறிக் கொண்டிருக்கும் போதும் வெளிப்பட்டது. அம்புகளின் மழையில் எல்லா விதமான அச்சத்தை விட்டும் கவலையற்றவராக, தன்னிறைவு பெற்றவராக இவ்வாறு அறிவிப்பு செய்து கொண்டிருந்தார்கள்:

நான் இறைவனின் உண்மையான நபி ஆவேன். எனக்கு இறை வழியில் எவரைப் பற்றியும் கவலை இல்லை. ஆனால், நான் இறைவன் இல்லை; மனிதனாவேன். அப்துல் முத்தலிபின் சந்ததியாவேன்.

வெளிப்படையில், முஸ்லிம்களுக்கு எதிராக இருந்த, பல சஹாபாவுக்கு சோதனையும் ஏற்பட்ட, அத்தகைய ஓர் உடன்படிக்கையில் ஹுதைபிய்யா சமயத்தில் கையொப்பம் இடப்பட்ட நேரத்திலும் இந்த தன்னிறைவு பெற்றவர் எனும் பண்பு வெளிப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (ஸல்) தாங்கள் ஏன் இப்படி கீழ்த்தரமான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறீர்கள்?' என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், 'உமரே! நான் இறைவனின் தூதர் ஆவேன். அவனுடைய பிரதிநிதியே ஆவேன். இறைவன் விரும்பு வதையே செய்வேன் என்று கூறினார்கள். அன்று இரவே இறைவன் சூரா ∴பத்ஹை இறக்கி அன்னாருக்கு اِنَّا فَتَحۡنَا لَکَ فَتۡحًا مُّبِیۡنًا ۙ மகத்தான வெற்றிக்கான நற்செய்தி வழங்கினான். (48:2)




அல்லாஹ்வின் பண்பான **அஸீஸ்** மற்றும் **காலிப்** ஆகியவற்றையும் வெளிப்படுத்துபவர்களாக இருந்தார்கள். கடுமையான பலவீனம் மற்றும் ஆதரவற்ற நிலையில் அல்லாஹ் அன்னாருக்கு வெற்றிகளுக்கான வாக்குறுதியை அளித்தான். மேலும், மிக மகத்தான முறையில் அவற்றை நிறைவேற்றினான். மேலும், சில சதுர மைல்கள் கொண்டிருந்த மதீனா நகரம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வாழ்நாளிலேயே 10 இலட்சம் சதுர மைல் தூரம் வரை விரிவடைந்து விட்டது.




அல்லாஹ்வின் பண்பு **வஹ்ஹாப்**, **முஃதீ** மற்றும் **ஜவாத்** ஆகியவற்றையும் வெளிப்படுத்துபவராக இருந்தார்கள். இறை வழியில் எந்த அளவுக்கு வழங்கினார்கள் என்றால், மக்கள் மனநிறைவு பெற்று விட்டார்கள். ஒரு மனிதர் கேட்டதன் பெயரில் இரண்டு மலைகளுக்கு நடுவில் இருந்த அனைத்து ஆடுகளையும் அளித்து விட்டார்கள். அவர் தனது கோத்திரத்திடம் சென்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு தாராள மனம் கொண்டவர் என்றால், அவர்கள் ஏழ்மையைப் பொருட்படுத்துவதில்லை என்று கூறினார். (புகாரி கிதாபுல் அதப், பாபு ஹுஸ்னல் ∴ஹல்க்)

ஒருமுறை தொழுகைக்கான இகாமத் சொல்லப்பட்டு விட்டது. ஒரு கிராமவாசி வந்து, என்னுடைய இன்ன தேவையை நிறைவேற்றுங்கள் என்று கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் அவருடன் புறப்பட்டுச் சென்றார்கள். அவருடைய தேவையை நிறைவேற்றினார்கள். பிறகு தொழ வைத்தார்கள். (அதபுல் மு.ஃப்ரத்)

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்புகளான, ***ஃகாலிக்***, ***ஃபாத்திர்*** மற்றும் ***முஸவ்விர்*** ஆகியவற்றையும் வெளிப்படுத்துபவராக இருந்தார்கள். அன்னார் புதிய, இணையற்ற ஆன்மிக வானையும், பூமியையும் படைத்தார்கள். அதற்கு அன்னாரே சூரியன் ஆவார்கள். ஆயிரக்கணக்கான சஹாபா, நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் 13 நூற்றாண்டுளின் நூற்றுக்கணக்கான விளக்கவுரையாளர்கள், முஹத்திஸ்கள், ஃபுக்ஹா (ஹதீஸ் மற்றும் மார்க்கச் சட்ட வல்லுனர்கள்), முஜத்தித்கள் (மார்க்கத்தைப் புதுப்பிப்பவர்கள்) மற்றும் அவ்லியா அன்னாருடைய சந்திரன்களும் நட்சத்திரங்களும் ஆவர்கள். அவர்கள் மறுமை நாள் வரை உலகிற்கு ஒளியூட்டிக் கொண்டே இருப்பார்கள். அவர்களில் பதினான்காவது நிலவான அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அனைத்து ஒளிகளையும் பிரதிபலித்தார்கள். நிலவே இப்படி என்றால், பிறகு சூரியன் எப்படி இருக்கும் என்று காட்டி விட்டார்கள்.



பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்புகளான ***ஹய்யு*** மற்றும் ***கய்யூம்*** என்பதையும் வெளிப்படுத்து-பவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது வ.ஃபாத்தின்போது கூறினார்கள்: அன்னாருடைய உடலுக்கு மரணம் வந்து விட்டது. ஆனால், அன்னாரது ஆன்மிக வாழ்விற்கு ஒருபோதும் மரணம் வராது. இன்றும் கூட அனைத்து அருள்களுக்கும் தலையூற்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அன்னாரைப் பின்பற்றியதனால்... எந்த அளவிற்கு மறைவான அடையாளங்களைக் கண்டேன் என்றால், அந்தத் தெள்ளத் தெளிவான ஒளிகளின் மூலம் நான் என் இறைவனைக் கண்டு கொண்டேன். (ரூஹானி கஸாயின் தொகுதி 15, பக்கம் 140)

அல்லாஹ்வின் ஒரு பண்பு ***ஃகயூர்*** தன்மானம் மிக்கவன் என்பதுமாகும். எவ்வாறு இறைவன் தன் அன்பர்களுக்காக தன்மானம் கொண்டுள்ளானோ அதே போன்று கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் தம் இறைவன் மற்றும் அவனது ஓரிறைமைக்காக தன்மானம் கொண்டிருந்தார்கள். உஹது போரின் மிகக் கடினமான சூழ்நிலையில் எதிரி, 'நாங்கள் முஹம்மதையும் (ஸல்), அபூபக்ரையும் (ரலி), உமரையும் (ரலி) கொன்று விட்டோம்' என்று முழுக்கமிட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதிநுட்பத்துடன் செயல்படுவதன் பொருட்டு, 'மௌனமாக இருங்கள்' என்று கூறினார்கள். ஆனால் அபூ சு.ஃப்யான் ஓரிமையைத் தாக்கிப் பேசியவாறு, ஹுபல் சிலை வாழ்க என்று கூறினார். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துடிதுடித்தவாறு எழுந்தார்கள். 'நீங்கள் ஏன் பதில் அளிப்ப-தில்லை? அல்லாஹ்வே! எல்லாரையும் விட உயர்ந்தவனும். மேலானவனும் ஆவான் எனக் கூறுங்கள்'' என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் **குத்தூஸ்** மற்றும் **நஸீஃப்** ஆகிய பண்புகளையும் வெளிபடுத்துபவராக இருந்தார்கள். ஆன்மிகத் தூய்மை மற்றும் மகத்துவத்துடன் சேர்த்து, பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கத் தூய்மை மற்றும் பௌதிகத் தூய்மைக்கு எந்த அளவு போதனை வழங்கியுள்ளார்கள் என்றால், மேலும், அதன்படி செயல்பட்டுக் காட்டினார்கள் என்றால், அதற்கு நபிமார்களின் வரலாற்றில் எந்த முன்னுதாரணமும் கிடைப்பதில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் தூய்மையை ஈமானின் அடிப்படையாகக் கூறி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்துக்கு இந்த செயல் சிரமமானதாக இல்லாமல் இருந்திருந்தால், நான் ஒவ்வொரு தொழுகைக்கு முன்பும் மிஸ்வாக் செய்யக் கட்டளையிட்டிருப்பேன்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் (பண்புப்) பெயர்களான **தாஹிர்** மற்றும் **தய்யிப்** ஆகியவற்றிற்கும் முழு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களது இயல்பு மிகவும் தூய்மையானதாகவும், நேர்த்தியான-தாகவும் இருந்தது. தூய்மையான உணவையே பயன்படுத்துவார்கள். தூய்மை-யான உரையாடலையே நிகழ்த்துவார்கள். சஹாபாவுடன் நகைச்சுவையாகவும் நடந்து கொள்வார்கள். ஆனால் அதில் ஒரு சொல் கூட யார் மனதையும் புண்படுத்துவதாக இருக்காது.

அல்லாஹ் ***ஹயா*** வெட்க உணர்வு அதிகம் கொண்டவன் ஆவான். (முஸ்தத்ரிக் ஹாகிம் கிதாபுத் துஆஇ பாபு அல்லாஹ் ரஹீமுன். ஹதீஸ் எண் 1832)

சஹாபா (ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் கன்னிப் பெண்களை விடவும் அதிகம் வெட்க உணர்வு கொண்டவராக இருந்தார்கள். அன்னாருக்கு ஒரு விஷயம் பிடிக்கவில்லை என்றால், சஹாபா அன்னாரது முகத்திலிருந்தே அதை உணர்ந்து கொள்வார்கள். (புகாரி கிதாபுல் அதப் பாபு ம(ன்)ல்லம் யுவாஜிஹின் நாஸ பில் அதாப். ஹதீஸ் எண் 6102)

ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுடன் திருமணம் நடைபெற்ற போது, அன்னார் சில சஹாபாவை வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தார்கள். உணவுக்குப் பிறகு சில சஹாபா உரையாடலில் ஈடுபட்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மற்ற பணி மும்முரங்கள் காரணமாக துன்பம் ஏற்பட்டது. ஆனால், அன்னார் வெட்க உணர்வின் காரணமாக அவர்களை செல்லுமாறு கூறவில்லை. அல்லாஹ் சூரா அஹ்ஸாபில் இந்த நிகழ்வைக் குறிப்பிட்டு முஸ்லிம்-களுக்கு ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தான். (அஹ்ஸாப்:54)



அல்லாஹ்வின் ஒரு பண்பு ***சதீர்*** மற்றும் ***சத்தார்*** ஆகும். அதாவது திரையிடக் கூடியவன். (சுனன் அபீதாவூத். கிதாபுல் ஹமாமி. பாபுன் நஹ்யீ அனித்த.்ரீ. ஹதீஸ் எண் 4012)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்குத் தங்களது திரையிடும் பண்பினைப் போதித்து வந்தார்கள். பிறருடைய தவறுகளையும் இயன்ற அளவு திரையிட்டு வந்தார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஓர் ஒட்டகம் தொலைந்து விட்டது. அது ஒரு காட்டரபிக்கு கிடைத்ததும் அவர் அதனை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம் இது எனது ஒட்டகம்தான் என்று கூறாமலேயே, அவருக்கு ஏழு ஒட்டகங்களை அதற்குப் பகரமாகக் கொடுத்தார்கள். (முஸ்னத் அஹ்மத் தொகுதி 2 பக்கம் 292 ஹதீஸ் 7905)

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்புகளான, ***ஃகாலிக்***, ***ஃபாத்திர்*** மற்றும் ***முஸவ்விர்*** ஆகியவற்றையும் வெளிப்படுத்துபவராக இருந்தார்கள். அன்னாருடைய கைகளினால் அல்லாஹ் அறிவை வியக்கச் செய்யக்கூடிய அற்புதங்களைக் காட்டினான். பத்ர் மைதானத்தில் ஓர் உள்ளங்கை அளவு மணல் வேகமான புயலாக மாறி விட்டது. அகழ்ப் போரின்போது சில மனிதர்களுடைய உணவை 1400 பேர் வயிறார உண்டனர். ஒரு குவளையில் சில மடக்கு தண்ணீர் இருந்தது. அதில் அன்னார் கையை வைத்ததும், விரல்களில் இருந்து நீரூற்றுப் பெருக்கெடுத்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் நோயுற்ற கண்ணில் கையால் தடவியதும் அது குணமாகி விட்டது. ஒரு சஹாபியின் கால் முறிந்து விட்டது. அன்னார் அதைத் தொட்டதும் அது சரியாகி விட்டது. இன்றும் கூட அறிவியலால் இந்த அற்புதங்களைப் புரிய முடியவில்லை. ஆனால் இறை நெருக்கம் பெற்றவர்கள் இன்றும் அல்லாஹ்வின் தூதரின் அருளினால் இந்தக் காட்சிகளைக் காட்டுகிறார்கள்.

முந்தைய நபிமார்களை மார்க்கத்தின் சொல் வழக்கில் உவமை வடிவில் இறைவனின் தொண்டர் மற்றும் மகன் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், நபி (ஸல்) அவர்களது வருகை இறைவனின் வருகையாக நிறுவப்பட்டுள்ளது. ஆகையால்தான் ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் மகத்துவத்தைக் குறித்து இவ்வாறு கூறியுள்ளார்கள்: இறைவா! உனது அரியணை என்றென்றும் நிரந்தரமானது. உனது ஆட்சியின் செங்கோல் நேர்மையின் செங்கோலாகும். (ஸூபூர் அதிகாரம் 45 வசனம் 6. சுர்மா சஷ்மா ஆர்யா ரூஹானி கஸாயின் பக்கம் 282)

அல்லாஹ்வின் ஒரு பண்புப் பெயர் ***ரஃபீக்*** அதாவது, மென்மையான இயல்புடையவன் என்பதாகும். நபி (ஸல்) அவர்கள் இதையும் நன்றாக மேற்கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு யூதரின் ஜனாஸாவைப் பார்த்து மரியாதைக்காக எழுந்து நின்றார்கள். மேலும் இவரும் மனிதர்தான் என்று கூறினார்கள். (புகாரி கிதாபுல் ஜனாயிஸ் பாபு மன் காம லிஜனாஸத்தி யஹூதீ)

ஒரு காட்டரபி நபவி பள்ளிவாசலை அசுத்தமாக்கி விட்டார். சஹாபா அவரை அடிக்க ஓடினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அவரை எதுவும் சொல்லாதீர்கள். பள்ளியைச் சுத்தம் செய்து விடுங்கள்' என்று கூறினார்கள். (திர்மிதி அப்வாபுஸ் ஸலாத் பாபு .்பில்பவ்லி யுஸீபுல் அர்ள்)

பெருமானார் (ஸல்) அவர்கள் ***ஹபீர்*** மற்றும் ***பஷீர்*** ஆகவும் இருந்தார்கள். தம்முடைய ஆயிரக்கணக்கான சஹாபிகளின் நிலைமைகளை விவரமாக அறிந்து வைத்திருந்தார்கள். அவர்களுடைய பொருளாதார, நல்லொழுக்க மற்றும் ஆன்மிகத் தன்மை ஆகியவற்றின் மீது கவனம் வைத்திருந்தார்கள். அதற்கேற்ப அறிவுரை வழங்கி வந்தார்கள். ஒருவருக்கு பெற்றோருக்குத் தொண்டு செய்ய அறிவுரை வழங்கினார்கள் என்றால், ஒருவருக்கு தொழுகை பற்றி அறிவுரை வழங்கினார்கள். ஒருவருக்கு வாளால் ஜிஹாது செய்வது பற்றி அறிவுரை வழங்கினார்கள். ஒருவருக்கு அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி அறிவுரை வழங்கினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்பான அல் ***ஜாமிஃ*** (ஒன்று திரட்டுபவன்) என்பதையும் வெளிப்படுத்துபவராக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் முதல் முறை உலகளாவிய தூதர் ஆக இருப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாக உலகின் எல்லா சமுதாயங்களும் ஒன்று சேர்ந்து விட்டன. கருப்பர்கள், வெள்ளையர்கள், அரேபியர்கள் அரேபியர் அல்லாதவர்கள் என்ற வேறுபாடு அழிந்து விட்டது.

இந்தப் பண்பின் வெளிப்பாட்டின் இரண்டாவது காலகட்டம் இதுவாகும். இன்று 213 நாடுகளைச் சேர்ந்த மக்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கலீ.்பாவின் கைகளில் ஒன்று கூடி ஓரிறைமைக்கான சான்று பகர்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து அன்னாரது ஒன்று திரட்டுபவர் என்ற பண்பிற்கு சான்று பகர்கிறார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்பான ***அலீம்*** என்பதையும் முழுமையாக வெளிப்படுத்துபவராக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய மறையான திருக்குர்ஆன் மறைவான ஞானத்தின் கடலாகும். இது மட்டுமின்றி, மறைவான வஹீயின் மூலம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நூற்றுக்கணக்கான முன்னறிவிப்புகளைச் செய்துள்ளார்கள். அவை இன்று வரை நிறைவேறிக் கொண்டே இருக்கின்றன.

அன்னாருடைய ஹிஜ்ரத், போர்கள் மற்றும் வெற்றிகள் பற்றிய பல முன்னறிவிப்புகள் அன்னாரது வாழ்நாளிலேயே நிறைவேறின. கல்வி அறிவு இல்லாத ஒரு சமுதாயத்தின் எழுதப் படிக்கத் தெரியாத ஒரு நபியின் மீது திருக்குர்ஆன் இறங்கியது. அல்லாஹ் "இந்தத் திருக்குர்ஆன் ஒரு

மறையாகும் என்றும், உலகில் மிக அதிகமாக எழுதப்படும் நூலாகவும், படிக்கப்படும் நூலாகவும் இதுவே இருக்கும்" என்றும் தெரிவித்தான். ரோம், ஈரான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் வெற்றிகள் பற்றிய முன்னறிவிப்புகள் கிலா∴பத்தே ராஷிதாவில் நிறைவேறின. பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாம் உச்சத்தை அடைந்த பிறகு அதன் வீழ்ச்சி ஏற்படும் என்று முன்னறிவித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் 'தஜ்ஜால், ய∴ஜூஜ் ம∴ஜூஜ், அதாவது, மேற்கத்திய சமுதாயங்களின் மத மற்றும் அரசியல் குழப்பங்கள் மற்றும் அறிவியலின் முன்னேற்றங்கள்' ஆகியவை பற்றி முன்னறிவித்தார்கள்.

இன்றைய காலகட்டத்தின் அனைத்து வசதிகள், எல்லாக் கண்டுபிடிப்புகள் மற்றும் Global Village ஆகிய இவற்றின் மீது ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்களது அலீம் என்கின்ற பண்பின் நிழல் இருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு இவ்வாறு கூறியுள்ளார்கள்: இறுதிக் காலத்தில் இறைவன் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மூலமாக நுபுவ்வத் வழியிலான கிலா∴பத்தை மீண்டும் நிலை பெறச் செய்வான்.

திருக்குர்ஆனில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மேலும், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இமாம் மஹ்தியின் காலத்தில் அழைப்பவர் ஒருவர் விண்ணிலிருந்து அழைப்பார். இமாம் மஹ்தியின் வருகை பற்றி தெரிவிப்பார். (பிஹாருல் அன்வார்: தொகுதி 52 பக்கம் 304. அஸ் ஷேக் முஹம்மத் பாக்கிர் மஜ்லிஸீ தாருல் இஹ்யாயித் தராஸில் அரபி. பைரூத்)

பிறகு அன்னாரது அருளால் தர்பிய்யத் பெற்ற மக்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று இவ்வாறு கூறினார்கள்: 'இமாம் மஹ்தியின் கலீ∴பாவை முழு உலகமும் காணும் (அவர்கள் குரலைக்) கேட்கும் எல்லா சமுதாயங்களும் தத்தமது மொழிகளில் அவர்களது உரையைச் செவிமடுக்கும். கிழக்கிலும், மேற்கிலும் வாழும் மு∴மின்களால் ஒருவர் மற்றவரைப் பார்க்க இயலும்.



(ஆக, முன்னோர்களான அந்த) சான்றோர்களின் கூற்றுகளில் சமூக வலைத்தளங்கள் தொடர்பாகவும் முன்னறிவிப்புகள் உள்ளன. இன்று அல்லாஹ்வின் 'அலீம்' மற்றும் 'அல்லாமுல் ∴குயூப்' எனும் பண்புகளை முழுமையாக வெளிப்படுத்துபவரின் அந்த முன்னறிவிப்புகள் அனைத்தும் நிறைவேறக் காண்கின்ற நாம் அந்த நற்பேறு பெற்ற மக்கள் ஆவோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நாம் எத்தகைய ஒரு நபியின் ஆடையைப் பற்றிப் பிடித்துள்ளோம் என்றால், அவர்கள் இறைவனை வெளிப்படுத்துபவர் ஆவார்கள்.

ஒருவர் மிக அருமையாக இப்படியொரு கவிதையை கூறியுள்ளார்:

முஹம்மது அரபி (ஸல்) அவர்கள் ஈருலக அரசர் ஆவார்கள். பரிசுத்தமான ஆன்மாவே அவரது வாயிலைக் காவல் காக்கும். அவரை இறைவன் என்று கூற முடியாதுதான் ஆனால், 'அவரது (உயர்) தரத்தை அறிவதில்தான், இறைவனை அறிதல் உள்ளது' என்று கூறுகிறேன். (சஷ்மயே ம∴ரி∴பத். ரூஹானி கஸாயின் தொகுதி 23, பக்கம் 306,308)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) இந்தக் கருத்தில் இவ்வாறு ஒளியி(ட்டுக் காட்)டுகிறார்கள்:

அல்லாஹ் தனது இருப்பை தன்னுடைய பண்புகளால் நம்மீது வெளிப்படுத்துகிறான். நம்பிக்கையாளர்களுக்கும் அல்லாஹ் கூறுகிறான்: என்னுடைய பண்புகளைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். என்னுடைய பண்புகளில் ஒன்றி விடுங்கள். என்னுடைய பண்புகளை மேற்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் என்னுடைய உண்மையான அடியார்கள் என அழைக்கப்படுவீர்கள்.

அல்லாஹ்வின் இந்த வழிகாட்டலின் உயர்ந்த முன்னுதாரணம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த நபரிடமும் இருக்க முடியாது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள்தான் அல்லாஹ்வின் அந்த அன்பிற்குரியவர் ஆவார்கள். அன்னாருடைய ஒளியினால் ஓர் உலகம் அருள் பெற்றது. அருள் பெறுகிறது. மேலும், தன்னைப் படைத்தவனை அடையாளம் கண்டு கொள்ளும் பொருட்டு அருளைப் பெற்றுக் கொண்டே செல்லும். இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய இருப்பை இவ்வாறு வர்ணித்துள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

"அந்த மனிதர் அனைவரையும் விட முழுமையானவரும், முழுமையான மனிதரும் ஆவார்கள். முழுமையான நபிஆவார்கள். முழு அருள்களுடன் வந்தார்கள். அதனால் (ஏற்பட்ட) ஆன்மிக உயிர்த்தெழச் செய்தல் மற்றும் ஒன்று திரட்டுதல் காரணமாக உலகின் முதல் கியாமத் வெளிப்பட்டது. மேலும், மரணித்திருந்த ஓர் உலகமே அவரது வருகையால் உயிர் பெற்று விட்டது. அந்த அருளுக்குரிய நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (நபிமார்களின் முத்திரை), இமாமுல் அஸ்∴பியா (தூயவர்களின் தலைவர்), கத்முல் முர்ஸலீன் (இறைத் தூதர்களில் இறுதி அந்தஸ்த்தை அடைந்தவர்), ∴ப∴ஹ்ருன் நபிய்யீன் (நபிமார்களின் பெருமிதத்திற்குரியவர்) ஜனாப் முஹம்மத் முஸ்த∴பா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

அன்பிற்குரிய இறைவா! உலகம் தோன்றிய நாள் முதல் நீ எவர் மீதும் பொழிந்திடாத அளவிற்கு அந்த அன்பிற்குரிய நபியின் மீது உனது அருளையும் கருணையையும் பொழிவாயாக!

அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் வ பாரிக் அலைஹி வ ஆலிஹீ வ அஸ்ஹாபிஹீ அஜ்மயீன். (இத்மாமே ஹுஜ்ஜத். ரூஹானி கஸாயின் தொகுதி 08, பக்கம் 308. பிப்ரவரி 23, 2007)

# ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)




தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

3

## இரண்டாவது கேள்விக்கான விடை

இந்த இரண்டு வசனங்களிலிருந்தும், மு.ஃ.ஜிஸாத்து -களை (அற்புதங்களை) மறுப்பது என்ற ஆட்சேபனை செய்பவரின் நோக்கம் ஒருபோதும் நிரூபணமாகவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இதற்கு நேர்மாறாக, ஓர் உண்மையான, முழுமையான நபியிடமிருந்து வெளிப்பட வேண்டிய அத்தகைய மு.ஃ.ஜிஸாத்துகள் (அற்புதங்கள்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கண்டிப்பாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தன என்பது நிரூபணமாகின்றது. அதன்படி, இதற்குரிய விளக்கம் கீழ்வரும் கூற்றுகளிலிருந்து நன்றாக வெளிப்பட்டு விடும்:

முதல் வசனத்தின் மொழியாக்கத்தை (ஆட்சேபனை செய்யும் ஜேம்ஸ் என்ற கிறித்தவர்) தனது வாதத்திற்கு ஆதரவாக சம்பந்தப்பட்ட சொற்றொடர்களைத் துண்டித்து விட்டு எடுத்து வைத்திருக்கிறார். அத்துடன் இருக்கும் மற்ற வசனங்களிலிருந்து கருத்து தெளிவாகிறது. அது இதுவாகும்:

وَقَالُوْا لَوْلَآ اُنْزِلَ عَلَيْهِ اٰيٰتٌ مِّنْ رَّبِّهٖ ؕ قُلْ اِنَّمَا الْاٰيٰتُ عِنْدَ اللّٰهِ ؕ
وَاِنَّمَآ اَنَا نَذِيْرٌ مُّبِيْنٌ اَوَلَمْ يَكْفِهِمْ اَنَّآ اَنْزَلْنَا عَلَيْكَ الْكِتٰبَ يُتْلٰى عَلَيْهِمْ ؕ
اِنَّ فِيْ ذٰلِكَ لَرَحْمَةً وَّذِكْرٰى لِقَوْمٍ يُّؤْمِنُوْنَ ............

وَيَسْتَعْجِلُوْنَكَ بِالْعَذَابِ ؕ وَلَوْلَآ اَجَلٌ مُّسَمًّى لَّجَآءَهُمُ الْعَذَابُ ؕ
وَلَيَاْتِيَنَّهُمْ بَغْتَةً وَّهُمْ لَا يَشْعُرُوْنَ

பொருள்: அந்த அடையாளங்கள் ஏன் இறங்கவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். (அதாவது நீங்கள் கேட்கின்ற அந்த தண்டனையின் அடையாளங்கள் ஏன் இறங்கவில்லை என்று அவர்கள் கேட்கின்றனர்). அவை இறைவனிடம் அவனுடைய குறிப்பிட்ட அதிகாரத்தின் கீழ் இருக்கின்றன. மேலும் நான் ஓர் எச்சரிக்கை செய்பவன் மட்டுமே ஆவேன். அதாவது தண்டனையின் நாளைப் பற்றி அச்சமூட்டுவது மட்டுமே எனது வேலையே தவிர, என் புறமிருந்து நான் தண்டனையை இறக்குவது அல்ல.

அடுத்து கூறுகிறான்: (தம் மீது ஏதாவது தண்டனையை இறக்க விரும்புகின்ற) அந்த மக்களுக்கு (எழுதப் படிக்கத் தெரியாத தூதரே!) நாம் (எல்லா மேன்மைகளையும் ஒருங்கே கொண்ட) மறைநூலை நாம் உமக்கு இறக்கியிருப்பதும் அது அவர்களுக்குப் படித்துக் காட்டப்படுவதும் ஆகிய இந்த அடையாளம் அதாவது திருக்குர்ஆன் போதுமானதில்லையா? அது ஒரு கருணையின் அடையாளமாகும். (திருக்குர்ஆன் 29:51-52 & 29:54 காண்க).

உண்மையில் இதிலிருந்து, தண்டனையின் அடையாளத்தால் மக்காவிலுள்ள மறுப்பாளர்கள் முழுமைப்படுத்த விரும்புகின்ற அதே கருத்துதான் வெளிப்படுகிறது. ஏனெனில் மக்காவிலுள்ள மறுப்பாளர்கள் தண்டனையின் அடையாளத்தை ஏன் கேட்கின்றனர் என்றால், அவை அவர்களின் மீது இறங்கி, அவர்களை حَقُّ الْيَقِيْنِ (ஹக்குல் யகீன் - உறுதியான நம்பிக்கை) என்ற அந்தஸ்து வரை கொண்டு செல்ல வேண்டும். அவை பார்க்கும் அளவில் மட்டும் இருக்கக் கூடாது என்பதாகும். ஏனெனில் வெறும் பார்க்கும் அளவிலான அடையாளங்களில் அவர்களை ஏமாற்றம் செய்வதற்கான, கண்ணை வசீகரம் செய்வதற்கான சாத்தியம் இருக்கிறது என்ற சிந்தனையும் அவர்களிடம் இருந்தது. எனவே இந்த சந்தேகத்தையும், நிம்மதியின்மை -யையும் நீக்குவதற்காக உங்களின் மீது இறங்கக் கூடிய (அதனால் உங்களை நாசமாக்கக் கூடிய) அத்தகைய அடையாளத்தையா நீங்கள் விரும்புகிறீர்கள்? பிறகு தண்டனைக்கான அடையாளத்தின் தேவை என்ன? இந்த நோக்கத்தைப் பெறுவதற்கு கருணையின் அடையாளம் அதாவது திருக்குர்ஆன் போதுமானதில்லையா? அது உங்களின் கண்களைத் தனது நிறைந்த ஒளியினாலும், கூர்மையான ஒளிக் கதிர்களினாலும் வியப்படையச்

செய்கிறது. மேலும் தனது சொந்த மேன்மைகளையும், தனது உண்மைகளையும், ஞானங்களையும், வழக்கத்திற்கு அப்பாற்பட்ட தனது சிறப்பம்சங்களையும் எந்த அளவுக்கு திறந்து வைத்திருக்கிறதென்றால், அதனுடன் போட்டி இடுவதற்கு அதனை எதிர்த்துப் போட்டி போடுவதற்கு உங்களால் இயலாமற்போய் விட்டது. மேலும் அது உங்கள் மீதும், உங்கள் சமுதாயத்தின் மீதும் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட தாக்கத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.★

மேலும் (திருக்குர்ஆன் ஆகிய) அது உள்ளங்களில் இறங்கி அற்புதத்திலும் அற்புதமான மாற்றங்களைக் காட்டிக் கொண்டிருக்கிறது. நீண்ட காலமாக இறந்தவர்கள் இதன் மூலமாக உயிருள்ளவர்களாகிக் கொண்டிருக்கின்றனர். மேலும் பிறப்பால் குருடராக இருந்து பல தலைமுறைகளாக குருடர்களாகவே இருந்து வந்திருக்கின்றவர்களுக்கு கண்களைத் திறந்து கொண்டிருக்கின்றது. மேலும் நிராகரிப்பு மற்றும் மார்க்கத்தில் வரம்பு மீறிச் செல்லுதல் ஆகியவை போன்ற பலவிதமான நோய்கள் இதன் மூலமாக நலமாகிக் கொண்டிருக்கின்றன. மேலும் காழ்ப்புணர்ச்சி என்னும் கடும் தொழுநோய் இதனால் சுத்தமாகிக் கொண்டிருக்கின்றது. இதனால் ஒளி கிடைக்கிறது. இருள் அகன்று விடுகிறது. இறைசந்திப்பு கிடைக்கின்றது. மேலும் அதற்கான அடையாளங்கள் உருவாகின்றன.

எனவே எப்போதும் வாழ்வை வழங்கக் கூடிய இந்த அருளின் அடையாளத்தை விட்டு விட்டு நீங்கள் ஏன் தண்டனை மற்றும் மரணத்திற்கான அடையாளத்தைக் கேட்கின்றீர்கள்? அதற்குப் பிறகு கூறுகின்றான்: இந்த சமுதாயமோ சீக்கிரம் தண்டனையைத்தான் வேண்டுகிறது. அருளின் அடையாளங்களிலிருந்து பயன் பெற விரும்புவ-தில்லை. அவர்களுக்குக் கூறுவீராக: தண்டனையின் அடையாளங்கள் சில நேரத்தில் துன்பத்துடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. அவ்வாறு இல்லை-யென்றால், தண்டனையைப் பற்றிய இந்த அடையாளங்களும் எப்போதோ இறங்கியிருக்கும்? மேலும் தண்டனை கண்டிப்பாக வரும்; அவர்களுக்குத் தெரியாத நேரத்தில் வரும்.

இப்போது நீதியுடன் பாருங்கள். இந்த வசனத்தில் எங்கு மு.ஃ.ஜிஸாத்துகள் (அற்புதங்கள்) பற்றிய மறுப்பு காணப்படுகிறது? நிராகரிப்பாளர்கள் அழிவுக்கான, தண்டனைக்கான அடையாளத்தைக் கேட்டிருந்தனர் என்பதை இந்த வசனங்கள் உரத்த குரலுடன் கூறிக் கொண்டிருக்-கின்றன. எனவே முதலில் அவர்களிடம், பாருங்கள். உங்களிடம் வாழ்வை அளிக்கும் அடையாளம் - அதாவது திருக்குர்ஆன் இருக்கின்றது - என்று கூறப்பட்டது. அது உங்களுக்கு இறங்கி உங்களை அழிவுக்குள்ளாக்க விரும்பவில்லை. மாறாக, அது நிரந்தரமான வாழ்வை வழங்குகிறது. ஆனால் தண்டனையின் அடையாளம் உங்கள் மீது இறங்கும்போது, அது உங்களை நாசமாக்கி விடும்.

---

★ திருக்குர்ஆனின் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட இந்த அனைத்து சிறப்புகளின் அடிப்படையில், (திருக்குர்ஆன் ஆகிய) அது மு.ஃ.ஜிஸா (அற்புதம்) என்று அழைக்கப்படுகின்றது. விரிவாக விளக்கப்பட்டுள்ள கீழ்வரும் சூராக்களில் நாம் விரிவாக கீழே எழுதுகின்றோம். சூரா பகரா, சூரா ஆல இம்ரான், சூரா அந்நிஸா, சூரா மாயிதா, சூரா அன்ஆம், சூரா அ.ஃரா.ஃப், சூரா அன்.ஃபால், சூரா தவ்பா, சூரா யூனுஸ், சூரா ஹூது, சூரா ரஅது, சூரா இப்ராஹீம், சூரா ஹிஜ்ர், சூரா அல்வாகிஆ, சூரா அந்நமல், சூரா ஹஜ், சூரா பய்யினா, சூரா முஜாதலா ஆகியவை. முன்மாதிரிக்காக சில வசனங்கள் இவையாகும். அவற்றின்படி முன்மாதிரிக்காக சில விஷயங்கள் இவையாகும்: கண்ணியமிக்கவனும், கம்பீரமிக்கவனும் ஆகிய அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

يَهْدِي بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضْوَانَهٗ سُبُلَ السَّلٰمِ وَيُخْرِجُهُمْ مِّنَ الظُّلُمٰتِ اِلَى النُّوْرِ [1]
شِفَآءٌ لِّمَا فِي الصُّدُوْرِ [2] - اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا [3] -
اَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَسَالَتْ اَوْدِيَةٌۢ بِقَدَرِهَا [4] - اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ اَنْزَلَ
مِنَ السَّمَآءِ مَآءً فَتُصْبِحُ الْاَرْضُ مُخْضَرَّةً [5] - تَقْشَعِرُّ مِنْهُ جُلُوْدُ الَّذِيْنَ
يَخْشَوْنَ رَبَّهُمْ ثُمَّ تَلِيْنُ جُلُوْدُهُمْ وَقُلُوْبُهُمْ اِلٰى ذِكْرِ اللّٰهِ [6] -
اَلَا بِذِكْرِ اللّٰهِ تَطْمَئِنُّ الْقُلُوْبُ [7] - اُولٰٓئِكَ كَتَبَ فِيْ قُلُوْبِهِمُ الْاِيْمَانَ وَاَيَّدَهُمْ
بِرُوْحٍ مِّنْهُ [8] - قُلْ نَزَّلَهٗ رُوْحُ الْقُدُسِ مِنْ رَّبِّكَ بِالْحَقِّ لِيُثَبِّتَ الَّذِيْنَ اٰمَنُوْا وَهُدًى
وَّبُشْرٰى لِلْمُسْلِمِيْنَ [9] - اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ [10] - فِيْهَا كُتُبٌ قَيِّمَةٌ [11] -
قُلْ لَّئِنِ اجْتَمَعَتِ الْاِنْسُ وَالْجِنُّ عَلٰٓى اَنْ يَّاْتُوْا بِمِثْلِ هٰذَا الْقُرْاٰنِ لَا يَاْتُوْنَ
بِمِثْلِهٖ وَلَوْ كَانَ بَعْضُهُمْ لِبَعْضٍ ظَهِيْرًا [12] -

அதாவது திருக்குர்ஆனின் மூலமாக சாந்தியின் பாதைகளைப் பற்றிய வழிகாட்டல்கள் கிடைக்கின்றன. மேலும் அவர்கள் இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வரப்படுகின்றனர். (5:17)[1] (திருக்குர்ஆன் ஆகிய) அது எல்லா உட்புறமான நோய்களையும் குணப்படுத்துகிறது. (10:58)[2] இறைவன் எத்தகைய நீரை இறக்கி இருக்கிறான் என்றால், அதன் மூலமாக இறந்த பூமி உயிர் பெற்றுக் கொண்டிருக்கிறது. (16:66)[3] எத்தகைய நீரை இறக்கி இருக்கிறான் என்றால், அதன் மூலமாக ஒவ்வொரு வளைகுடாவிலும் தனது விரிவுக்கேற்ப வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. (13:18)[4] அவன் எத்தகைகைய நீரை இறக்கினான் என்றால், அதன் மூலமாக கெட்டுப்போய் நாற்றமடிக்கின்ற பூமி பச்சைப் பசுமையாகி விட்டது. அதன் மூலமாக இறையச்சத்தினால் அடியார்களின் உடல் தோல்கள் நடுங்குகின்றன. (22:64)[5] பிறகு அவர்களின் தோல்களும், அவர்களின் உள்ளங்களும் இறைவனை நினைவு கூர்வதற்கு மென்மையாகி விடுகின்றன. (39:24)[6] திருக்குர்ஆன் மூலமாக உள்ளங்கள் நிம்மதியடைக்கின்றன. (13:29)[7]

எவர்கள் திருக்குர்ஆனுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்-களாகி விடுகின்றனரோ, அவர்களின் உள்ளங்களில் ஈமான் எழுதப்படுகின்றது. மேலும் அவர்களுக்கு ரூஹுல் குத்ஸ் கிடைக்கின்றது. (58:23)[8]

திருக்குர்ஆன் நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்களை உறுதிப்படுத்துவதற்காகவும், முஸ்லிம்களுக்கு நேர்வழிக்கும், நற்செய்திக்கும் அடையாளமாக இருப்பதற்காகவும் ரூஹுல் குத்ஸே திருக்குர்ஆனை இறக்கியது. (16:103)[9] நாமே திருக்குர்ஆனை இறக்கி இருக்கிறோம். மேலும் நாமே அதைப் பாதுகாப்போம். (15:10)[10] அதாவது, வடிவத்தின் அடிப்படையிலும், சிறப்புத் தன்மையின் அடிப்படையிலும் திருக்குர்ஆன் எப்போதும் அதன் அசல் நிலையில் இருக்கும். இறைபாதுகாப்பின் நிழல் அதன் மீது இருக்கும்.

பிறகு கூறுகிறான்: உண்மையான மறைநூல்களில் காணப்படுகின்ற அந்த எல்லா இறைஞானங்களும், உண்மைகளும் வாய்மைகளும் திருக்குர்ஆனில் காணப்படுகின்றன. (98:4)[11] ஜின்களும், மனிதர்களும் (குர்ஆன் ஆகிய) இதற்கு நிகரானதை உருவாக்குவதற்கு ஆற்றல் இல்லை. இந்தப் பணியில் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை செய்தாலும் சரியே! (17:89)[12] - நூலாசிரியர்.

எனவே நீங்கள் ஏன் தேவையில்லாமல் மரணிப்பதையே விரும்புகிறீர்கள்? நீங்கள் தண்டனையையே வேண்டுகின்றீர்கள் என்றால், அதுவும் சீக்கிரம் வந்து விடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே கம்பீரமான மகத்துவத்தைக் கொண்ட அல்லாஹ், இந்த வசனங்களில் தண்டனைக்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான். மேலும் அருளின் அடையாளமாக இருக்கின்ற திருக்குர்ஆன், உள்ளங்களில் இறங்கி, வழக்கத்திற்கு அப்பாற்பட்ட தனது தாக்கத்தை அவர்களிடம் வெளிப்படுத்துகின்ற அவற்றின் பக்கம் கவனமூட்டினான்.

இந்த வசனத்தில் لَا نَافِيَة (நா.ஃ.பிய்யா லா - அதாவது எந்த வகையானதும் இல்லை) என்று இருக்கும் (எதிர்மறையைக் குறிப்பிடும் அரபுச்) சொல் என்பது மு.ஃ.ஜிஸாத்துகள் (அற்புதங்கள்) என்பதன் அனைத்து வகையையும் குறிப்பிடுகிறது; எனவே அனைத்து (வகையான) மு.ஃ.ஜிஸாத்துகளையும் (அற்புதங்களையும்) மறுப்பது கட்டாயமாகிறது என்ற ஆட்சேபனை செய்பவரின் எண்ணம், அரபி இலக்கணத்தைப் பற்றிய அறியாமையின் காரணமாகவே இருக்கிறது. ‘இல்லை’ என்ற எதிர்மறையின் தாக்கம் என்பது, பேசுபவரின் எண்ணத்தில் - அந்த எண்ணம் விளக்கமாகக் கூறப்பட்டிருந்தாலும் அல்லது சைகையாகக் கூறப்பட்டிருந்தாலும் - அந்த அளவுக்கு உட்பட்டதாகவே இருக்கின்றது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, இப்போது குளிரின் எந்த அடையாளமும் எஞ்சியிருக்கவில்லை என்று ஒருவர் கூறினால், அவர் தனது ஊரின் பெயரை வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை என்றாலும் கூட, அவர் தனது ஊரின் தற்போதைய நிலைமைக்கேற்ப கூறியிருக்கிறார் என்பது வெளிப்படையானதாகும். ஆனால் அவரது கூற்றினால் மலைப் பிரதேசத்திலுள்ள எல்லா நாடுகளிலும் குளிர் போய் விட்டது என்பதும், எல்லா இடங்களிலும் கடும் வெயில் அடிக்க ஆரம்பித்து விட்டது என்பதும் அவரது வாதமாகும் என்று கருதுவதும் அதற்கு அவர், எந்த வகையான لَا (‘லா’ - அதாவது எந்த வகையானதும் இல்லை) என்று இருக்கும் (எதிர்மறையைக் குறிப்பிடும் அரபுச்) சொல்லை அவர் பயன்படுத்தியுள்ளாரே அது نَفِيْ جِنْس (ந.ஃ.பி ஜின்ஸ் எனும் அனைத்து வகையையும் குறிப்பிடும்) لَا (‘லா’) என்பதாகும். (அதாவது எந்த வகையானதும் இல்லை) என்பதாகும். அது அனைத்து உலகத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்ற சான்றை எடுத்து வைப்பது சரியானதல்ல.

மக்காவில் மேலோங்கியிருந்த சிலை வணங்கிகள், கடைசியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தையும் அவர்களின் மு.ஃ.ஜிஸாத்துகளையும் (அற்புதங்களையும்) மு.ஃ.ஜிஸாத்துகள் (அற்புதங்கள்) என ஏற்றுக் கொண்டு விட்டனர். அவர்கள் நிராகரிக்கும் காலத்திலும் வெறும் சாதாரண நிராகரிப்பாளர்களாக இருக்கவில்லை. மாறாக, அவர்கள் வியக்கத்தக்க சிந்தனையினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ரோம், ஈரான் ஆகிய நாடுகளுக்குச் சென்று புகழ்பெற்ற மந்திரக்காரர் என்று பிரபலமாக்கிக் கொண்டிருந்தனர். அது பொருத்தமில்லாத கோணத்திலேயே இருந்தாலும் அவர்கள் அவ்வாறு செய்தனர். ஆயினும், அவர்கள் அடையாளங்களை ஒப்புக் கொண்டு வந்தனர். அவர்கள் ஒப்புக் கொண்டவை பற்றித் திருக்குர்ஆனில் இருக்கின்றன. முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் உறுதியான ஒளிகளின் கீழ் அமுங்கிக் கிடந்த அவர்கள் தமது வீரியமில்லாத, பலவீனமான சொல்லில் لَا نَافِيَة (நா.ஃ.பிய்யா வகையைச் சேர்ந்த ‘லா’ என்பதை - அதாவது அனைத்து வகையையும் குறிப்பிடும் ‘இல்லை’ என்று கூறும் لَا என்பதை ஏன் பயன்படுத்தத் தொடங்கினர்? அப்படியே அவர்களுக்கு (எல்லா வகையையும் கொண்டது என்ற) நீண்ட மறுப்பு இருந்திருக்குமென்றால், (அதாவது இவருக்கு ஓர் அற்புதம் கூட இறங்கவில்லை என்று கருதியிருந்தால்), அவர்கள் தமது இரத்தத்தை சிந்துவதாலும், தமது உயிர்களை அர்ப்பணிப்பதாலும் நிரூபித்துக் காட்டிய மிகவும் உயர்தரமான உறுதித் தன்மையினால் இஸ்லாத்தை ஏன் ஏற்றுக் கொண்டனர்? நிராகரிக்கும் நாட்களில் அவர்கள் மீண்டும் மீண்டும் கூறிய கூற்றுகளாக, திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அவர்கள் தமது குறைமதியின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மாயவித்தைக்காரர் என்ற பெயரை வைத்தனர். அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِنْ يَّرَوْا اٰيَةً يُّعْرِضُوْا وَيَقُوْلُوْا سِحْرٌ مُّسْتَمِرٌّ (வ இன்ய் யரவ் ஆயதன்ய் யு.ஃ.ரிழூ வ யகூலூ சிஹ்ரும் முஸ்தமிர்) அதாவது அவர்கள் ஏதாவது ஓர் அடையாளத்தைக் கண்டால் முகம் திருப்பி விடுகின்றனர். மேலும் இது உறுதியான மாயவித்தையே ஆகும் என்று கூறுகின்றனர். (திருக்குர்ஆன் 54:3 காண்க).

பிறகு அல்லாஹ் இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறான்:

وَعَجِبُوْٓا اَنْ جَآءَهُمْ مُّنْذِرٌ مِّنْهُمْ ۫ وَقَالَ الْكٰفِرُوْنَ هٰذَا سٰحِرٌ كَذَّابٌ ۖ

(வ அஜிபூ அன் ஜாஅஹுைம் முன்ஸிரும் மின்ஹுைம் வ காலல் கா.ஃ.பிரூன ஹாஸா ஸாஹிருன் கஸ்ஸாப்). அதாவது அவர்களிலிருந்தே ஒருவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார் என்பதால் அவர்கள் வியப்படைகின்றனர். நிராகரிப்பாளர்கள், இவர் ஒரு சூனியக்காரரும், பொய்யுரைப்பவரும் ஆவார் என்று கூறுகின்றனர். (திருக்குர்ஆன் 38:5 காண்க).



இப்போது அவர்கள் அடையாளங்களைக் கண்ட பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சூனியக்காரர் என்று கூறி வந்தனர் என்பது வெளிப்படையானதாகும். பின்னர் அந்த அடையாளங்களையே மு.ஃ.ஜிஸா (அற்புதம்) என்று ஒப்புக் கொண்டும் விட்டனர். மேலும் முழுத் தீவும் முஸ்லிம்களாகி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய மு.ஃ.ஜிஸாத்துகளுக்கு (அற்புதங்களுக்கு) உண்மையான உள்ளத்துடன் நிரந்தரமாக சாட்சியாளர்களாகி விட்டனர். பிறகு அப்படிப்பட்ட மக்களால் பொதுவாக அடையாளங்களை எவ்வாறு தெளிவாக மறுக்க முடியும்? மேலும் மு.ஃ.ஜிஸாத்துகளை மறுப்பதற்கு அவர்களுடைய தைரியத்தின் எல்லைக்கு

அப்பாற்பட்டதும், தொன்றுதொட்டே இருந்து வரும் அவர்களின் கருத்தை விட்டும் வெகு தொலைவில் இருக்கின்றதுமான (அனைத்து வகையையும் மறுக்கக் கூடிய) அத்தகைய نافيها لَا (நா∴பிய்யா லா அதாவது ஓர் அடையாளம் கூட இறங்கவில்லை) என்பதை பயன்படுத்தியிருப்பார்கள். இன்னும் கூறுவதாயின், திருக்குர்ஆனில் எந்தெந்த இடங்களில், இந்தத் தூதரின் மீது ஏன் எந்த அடையாளமும் இறங்கவில்லை என்ற இந்த ஆட்சேபனை மறுப்பாளர்களின் சார்பாக எழுதப்பட்டுள்ளதோ அங்கு நாங்கள் கேட்கின்ற அடையாளங்களில் எந்த அடையாளமும் ஏன் இறங்கவில்லை என்பதே அவர்களின் கருத்தாக இருக்கிறது என்பதும் அத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது சூழ்நிலைக்கேற்ற பொருத்தமான முறையில் சூரியனைப் போன்று வெளிப்படையாக இருக்கிறது.★

★ திருக்குர்ஆனில் நிராகரிப்பாளர்கள் சார்பாக அடையாளம் கேட்ட கேள்விகள் வெறும் ஒன்றிரண்டு இடங்களில் அல்ல. மாறாக, பல இடங்களில் இதே கேள்வியே கேட்கப்பட்டது என்பது தெளிவாகட்டும். அந்த எல்லா இடங்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது, மக்கத்து நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மூன்று விதமான அடையாளங்களைக் கேட்டு வந்தனர் என்பது நிரூபணமாகின்றது.

ஒன்று, மக்கத்து கா∴பிர்கள் தனது அறியாமையினால் மட்டும் கேட்கப்பட்ட தண்டனையின் வடிவிலான அடையாளங்கள்.

இரண்டாவது, தண்டனையின் வடிவில் அல்லது தண்டனைக்கு முன்னோடியான வடிவில் முந்தைய சமுதாயங்களுக்கு இறக்கப்பட்டிருந்த அந்த அடையாளங்கள்.

மூன்றாவது, மறைவான திரை என்பது முற்றிலும் விலகி விடும் அப்படிப்பட்ட அடையாளங்கள். அது நீங்குவது மறைவானவற்றின் மீது ஈமான் கொள்வது என்பதற்கு முற்றிலும் மாற்றமானதாகும். எனவே தண்டனைக்கான அடையாளம் வெளிப்படுவதாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையாக, நீங்கள் எதிர்பார்த்திருங்கள்; தண்டனை இறங்கும் என்றே திருக்குர்ஆனில் தரப்பட்டிருக்கின்றது. ஆயினும் முன்னர் பொய் எனக் கூறப்பட்ட அப்படிப்பட்ட தண்டனையை இறக்குவது மறுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் தண்டனை இறங்குவதற்கான வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. இறுதியில் அது போர்களின் மூலமாக நிறைவடைந்து விட்டது. ஆனால் மூன்றாவது வகையான அடையாளத்தைக் காட்டுவது முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட கேள்விக்கான விடை மறுப்பாகத்தான் இருக்க முடியுமே தவிர வேறொன்றும் இருக்க முடியாது என்பது வெளிப்படை.

ஏனெனில் பூமியிலிருந்து வானம் வரை ஓர் ஏணியின் மூலமாக நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நீர் வானத்திற்கு ஏறிச் செல்ல வேண்டும். நாங்கள் கையில் எடுத்துப் படிக்கும் ஒரு மறைநூலை நீர் எங்களுக்கு வானத்திலிருந்து கொண்டு வந்து அதை நாங்கள் படிக்க வேண்டும்; படிப்பதும் எங்கள் கைகளால் தொட்டுப் படிக்க வேண்டும். அதுவரை நாங்கள் உம்மை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று கா∴பிர்கள் கூறினர். அல்லது நீர் இப்படிச் செயவீராக: எப்போதும் தண்ணீருக்காகத் துன்பப்படுகின்ற மக்காவில் சிரியா, ஈராக் நாடுகளைப் போன்று நதிகள் ஓட வேண்டும். மேலும் இப்போதுவரை எந்த அளவுக்கு எங்களின் சான்றோர்கள் மரணித்து விட்டார்களோ, அவர்கள் அனைவரும் உயிர் பெற்று வர வேண்டும். மேலும் அவர்களில் குஸை பின் கிலாப் (Qusai bin Kilab) என்பவரும் இருக்க வேண்டும். ஏனெனில் அந்தப் பெரியவர் எப்போதும் உண்மை பேசி வந்தார். நாங்கள் அவரிடம், உமது வாதம் உண்மையா அல்லது பொய்யா என்று கேட்போம். (மக்கத்து கா∴பிர்களாகிய) அவர்கள் கேட்ட இவையெல்லாம் மிகக் கடுமையான, தாமே உருவாக்கிக் கொண்ட அடையாளங்கள் ஆகும். அதுவும் தெளிவாக அல்லாமல் நிபந்தனைக்கு மேல் நிபந்தனை விதித்துக் கேட்டனர். இவற்றைப் பற்றி திருக்குர்ஆனில் இடத்திற்கிடம் வந்திருக்கிறது.

எனவே அரபு மக்களில் விஷமத்தனத்தை செய்பவர்களின் அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் நமது தலைவரும், எஜமானருமாகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வெளிப்படையான மு∴ஜிஸாத்துகள் (அற்புதங்கள்), தெளிவான இறையடையாளங்கள், இறைதூதுத்துவம் ஆகியவற்றைப் பற்றிய அச்சத்திற்கு மிகத் தெளிவான சான்று ஆகும். நமது எஜமானரும், தலைவருமாகிய முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்களுடைய உண்மையின் ஒளிகள் எந்த அளவுக்கு உள்ளத்தின் இந்தக் குருடர்களை இயலாமையிலும், தொல்லைக்கும் உள்ளாக்கி வைத்திருந்தது என்பதையும், வானத்தின் எத்தனை ஆதரவுகள், எத்தனை அருள்கள் என்னும் மழைகள் பொழிந்து கொண்டிருந்தன என்பதையும் இறைவனே அறிவான். அவற்றால் வியப்படைந்து, அவற்றின் அச்சத்தால் முகம் திருப்பி முற்றிலும் தள்ளிப் போடுவது மற்றும் வெருண்டோடுவதன் நோக்கத்தினால் நேர்மைக்குப் புறம்பான விண்ணப்பங்களை செய்து வந்தனர்! இந்த விதமான மு∴ஜிஸாத்துகளை (அற்புதங்களை)க் காட்டுவது மறைவான -வற்றின் மீது ஈமான் கொள்வது என்பதன் எல்லைக்கு வெளியில் இருப்பதாகும் என்பது வெளிப்படையானதாகும்.

பூமியிலிருந்து வானம் வரை ஓர் ஏணியை வைப்பதற்கான ஆற்றல் அல்லாஹ்வுக்கு இருக்கிறதுதான். அதை அனைவரும் பார்க்கவும் செய்யலாம். இரண்டாயிரம், நான்காயிரம் பேர் என்ன, இரண்டு கோடி, நான்கு கோடி பேரை உயிரூட்டி அவர்களின் நாவினால் அவர்களின் சந்ததிகளின் முன்னால் நுபுவ்வத்திற்கான சாட்சியை (அல்லாஹ்) வழங்க வைக்க முடியும். இவற்றையெல்லாம் அவன் செய்ய முடியும். ஆனால் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இந்த அளவுக்கு முழுமையாக தெளிவாவதால் நற்கூலிக்கும், நற்பலனுக்கும் அடிப்படையாக இருக்கின்ற மறைவானவற்றின் மீதுள்ள ஈமான் என்பது நீங்கி விடுகிறது. மேலும் உலகமும், மக்களும் மீண்டும் உயிர்த்தெழுப்பப்பட்டு ஒன்று கூடும் இடத்தைப் போன்ற ஒன்றாகி விடுகிறது என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

எனவே எவ்வாறு முழுமையான தெளிவு கிடைத்துவிடும் நேரமாக இருக்கும் மறுமை எனும் களத்தில் ஈமான் கொள்வது பயன்படாதோ, அவ்வாறே இந்த முழுமையான தெளிவு கிடைத்து விட்ட பிறகு ஈமான் கொள்வதாலும் அதற்கு எந்தப் பயனும் இல்லை. மாறாக, கொஞ்சம் மறைவானதும் எஞ்சியிருக்கும் நிலை வரைதான் ஈமான் என்பது ஈமான் என்று அழைக்கப்படுகிறது. எல்லாத் திரைகளும் அகன்று விட்டபோது பிறகு ஈமான் என்பது ஈமானாக இருப்பதில்லை. இதன் காரணமாகத்தான் மறைவானவற்றின் மீது ஈமான் கொள்ளுதல் என்பதை கவனத்தில் கொண்டவாறு எல்லா நபிமார்களும் மு∴ஜிஸாத்துகளை(அற்புதங்களை)க் காட்டி வந்திருக்கின்றனர். ஒரு நகரம் முழுவதையும் உயிரூட்டி அவர்கள் மூலமாக தனது நுபுவ்வத்திற்கான சாட்சியைக் காட்டுவதை எந்த நபியும் செய்து காட்டவில்லை. அல்லது அனைவருக்கும் முன்னால் ஏணியில் ஏறிச் சென்று முழு உலகிற்கும் வித்தை காட்டவில்லை - நூலாசிரியர்.

இப்போது சுருக்கமாக, (அப்துல்லாஹ் ஜேம்ஸ் எனும் பாதிரியாகிய) நீங்கள் மேற்கூறப்பட்ட வசனத்திலுள்ள لَا نَافِيَّه (நா.்.பிய்யா வகையைச் சேர்ந்த 'லா' என்பதை - அதாவது அனைத்து வகையையும் குறிப்பிடும் 'இல்லை' என்று கூறும் لَا) என்பதை இருக்க வேண்டிய எல்லையை விட அதிகமாக நீட்டி விட்டீர்கள். அப்படிப்பட்ட (அனைத்து வகையையும் மறுக்கும்) لَا نَافِيَّه (லாயே நா.்.பிய்யா) என்பது அரபிகளுக்கு கனவில் கூட ஒருபோதும் வந்திருக்காது. அவர்களின் உள்ளங்களோ இஸ்லாத்தின் உண்மையினால் நிறைந்திருந்தன. அதனால்தானே அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட அந்த தண்டனையை அடைந்த ஒரு சிலரைத் தவிர அனைவரும் கடைசியில் இஸ்லாத்தைத் தழுவி விட்டனர்!

('இல்லை' என்ற பொருளைக் கொண்ட) இப்படிப்பட்ட لَا نَافِيَّه (நா.்.பிய்யா வகையைச் சேர்ந்த 'லா') என்பது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சொல்லிலும் காணப்படுகிறது என்பது நினைவிருக்கட்டும். அது கீழ்வருமாறு:

அப்பொழுது பரிசேயர் வந்து அவரோடே தர்க்கிக்கத் தொடங்கி, அவரைச் சோதிக்கும்படி, வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர் தமது ஆவியில் பெருமூச்சு விட்டு: இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மாற்கு அத்தியாயம் 8 வசனம் 11,12)

இப்போது பாருங்கள். ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் எப்படித் தெளிவாக மறுத்து விட்டார்கள்? (பாதிரி அப்துல்லாஹ் ஜேம்ஸ் ஆகிய) நீங்கள் சிந்தித்தால், உங்களின் ஆட்சேபனை இந்த ஆட்சேபனைக்கு முன் ஒன்றுமில்லை. ஏனெனில் (திருக்குர்ஆன்) நிராகரிப்பாளர்களின் மறுப்பை எடுத்து வைத்திருக்கிறது. அதுவும் பொதுவான மறுப்பு அல்ல. மாறாக, குறிப்பிட்ட அடையாளங்களைக் குறித்த மறுப்பு. மேலும் பகைவர்களின் மறுப்பு என்பது முற்றிலும் திருப்திகரமானதாக இருப்பதில்லை என்பது வெளிப்படையானதாகும். ஏனெனில் பகைவர் சம்பவத்திற்கு மாறாகவும் கூறி விடுகிறார். ஆனால் ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் தமது நாவினாலே அற்புதங்களைக் காட்டுவதற்கு மறுக்கின்றார்கள். மேலும் அற்புதங்கள் தொடர்ந்து நடைபெறுவதைக் காலத்துடன் தொடர்புபடுத்தி இருக்கிறார்கள். மேலும் இக்காலத்தின் மக்களுக்கு எந்த அடையாளமும் கொடுக்கப்பட மாட்டாது என்று கூறுகிறார்கள். எனவே அற்புதங்களை மறுப்பது தொடர்பாக இதை விட அதிகமாக வேறு எந்தக் கூற்று தெளிவாக முடியும்? மேலும் (அனைத்து வகையையும் மறுக்கும்) இந்த لَا نَافِيَّه (நா.்.பிய்யா லா) என்பதை விட அதிகமாக (அனைத்தையும் மறுக்கும் வேறு எந்த لَا نَافِيَّه (நா.்.பிய்யா லா) இருக்க முடியும்?

பிறகு (பாதிரி அப்துல்லாஹ் ஜேம்ஸ் என்பவரால்) இன்னொரு (17:59,60 ஆகிய) வசனத்தின் பொருள் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. அதிலும் முன்னால், பின்னால் உள்ள வசனங்களை விட்டும் தனியாக்கி அதன் மீது ஆட்சேபனை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் அசல் வசனத்தையும், அது தொடர்பானவற்றையும் பார்க்கும்போது வசனத்தில் மு.்.ஜிஸாவை (அற்புதத்தை) மறுப்பதாகக் குறிப்பிடும் அப்படிப்பட்ட எந்தவொரு சொல்லும் இல்லை. இன்னும் கூறுவதென்றால், எல்லாச் சொற்களும் மு.்.ஜிஸாக்கள் (அற்புதங்கள்) கண்டிப்பாக வெளிப்பட்டன என்பதைக் குறிப்பிடுகின்றன என்பதை அகப்பார்வை கொண்ட ஒவ்வொரு நேர்மையாளராலும் புரிந்து கொள்ள முடியும். அந்த வசனமும், அது தொடர்பான பிற வசனங்களும் இவையாகும்:

وَاِنْ مِّنْ قَرْيَةٍ اِلَّا نَحْنُ مُهْلِكُوْهَا قَبْلَ يَوْمِ الْقِيٰمَةِ اَوْ مُعَذِّبُوْهَا عَذَابًا شَدِيْدًا ؕ
كَانَ ذٰلِكَ فِى الْكِتٰبِ مَسْطُوْرًا ۞ وَمَا مَنَعَنَآ اَنْ نُّرْسِلَ بِالْاٰيٰتِ اِلَّآ اَنْ كَذَّبَ بِهَا الْاَوَّلُوْنَ ؕ
وَاٰتَيْنَا ثَمُوْدَ النَّاقَةَ مُبْصِرَةً فَظَلَمُوْا بِهَا ؕ وَمَا نُرْسِلُ بِالْاٰيٰتِ اِلَّا تَخْوِيْفًا

அல்லாஹ் கூறுகிறான்: மறுமை நாளுக்கு முன்னர் ஒவ்வோர் ஊரையும் நாம்தான் அழித்து விட இருக்கிறோம். அல்லது கடுமையான தண்டனையை இறக்க இருக்கிறோம். இதுவே இறைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் (தண்டனை வடிவில் முந்தைய சமுதாயங்களுக்கு இறங்கியிருக்கின்ற) சென்ற கால அந்த சீற்றத்தைக் கொண்ட சில அடையாளங்களை முந்தைய சமுதாயங்கள் பொய்ப்படுத்தி விட்டன என்பதால் அவற்றை நாம் இப்போது இறக்குவதில்லை. (17:59,60 காண்க)

நாம் சமூது சமுதாயத்துக்கு, 'தண்டனைக்கு முன்னுள்ள அடையாளமாக இருந்த' ஒட்டகத்தை வழங்கினோம். அது உண்மையை வெளிப்படுத்தும் அடையாளமாக இருந்தது. அதற்கு அவர்கள் அநீதி இழைத்தனர். (17:59,60 காண்க)

(அதாவது தீனி தின்றும், உணவருந்தியும் வந்த அந்த ஒட்டகத்தின் காரணமாக மலை நகரத்தில் வாழ்ந்த சமூது சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் குளத்திலுள்ள தண்ணீரை அருந்தக் கொடுப்பதற்கு தண்ணீர் எஞ்சியிருந்ததுமில்லை. அவர்களின் கால்நடைகளுக்கு மேயும் இடமும் இருந்ததில்லை. மேலும் ஒரு கடுமையான துன்பத்திலும், துக்கத்திலும், சோதனையிலும் அவர்கள் மூழ்கிக் கிடந்தனர்).



மேலும் கடுமையான அடையாளங்களை இறக்குவத -னால் நமது நோக்கம், மக்கள் அவற்றால் அஞ்ச வேண்டும் என்பதே ஆகும். அதாவது அச்சமூட்டும் அடையாளங்கள் என்பது பயமுறுத்துவதற்காக மட்டுமே காட்டப்படுகிறது. எனவே முந்தைய சமுதாயங்கள் அப்படிப்பட்ட பயங்கரமான அடையாளங்களைப் பார்த்து பொய் எனக் குறிப்பிட்ட, அவற்றைப் பார்த்து கொஞ்சமும் அஞ்சாத, பயப்படாத அப்படிப்பட்ட பயங்கரமான அடையாளங்களை வேண்டுவதால் என்ன பயன்?

(தொடரும்...)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை - இறைவன் பக்கம் அழைத்தல் என்பதன் ஒளியில்

மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி ஸாஹிப்
(நாஸிர் ஆலா காதியான்)

*தமிழாக்கம்: மவ்லவி M. ரஃபீக் அஹ்மத்*

يٰۤاَيُّهَا النَّبِىُّ اِنَّاۤ اَرۡسَلۡنٰكَ شَاهِدًا وَّمُبَشِّرًا وَّنَذِيۡرًا ۙ
وَّدَاعِيًا اِلَى اللّٰهِ بِاِذۡنِهٖ وَسِرَاجًا مُّنِيۡرًا

இந்த வசனங்களின் பொருள் இதுவாகும். அதாவது நபியே! நாம் உம்மை ஒரு சாட்சியாகவும் நற்செய்தி கூறுபவராகவும் எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பியுள்ளோம். அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அவன் பக்கம் மக்களை அழைப்பவராகவும், ஒளி தரக் கூடிய சூரியனாகவும் உம்மை அனுப்பியுள்ளோம். (33:46,47)

يٰۤاَيُّهَا الرَّسُوۡلُ بَلِّغۡ مَاۤ اُنۡزِلَ اِلَيۡكَ مِنۡ رَّبِّكَ ؕ
وَاِنۡ لَّمۡ تَفۡعَلۡ فَمَا بَلَّغۡتَ رِسَالَتَهٗ ؕ وَاللّٰهُ يَعۡصِمُكَ مِنَ النَّاسِ ؕ
اِنَّ اللّٰهَ لَا يَهۡدِى الۡقَوۡمَ الۡكٰفِرِيۡنَ

தூதரே! உமது இறைவனிடமிருந்து எது உம்மீது இறக்கப்பட்டிருக்கின்றதோ அதை மக்களுக்கு எட்ட வைப்பீராக. நீர் அவ்வாறு செய்யாமல் இருந்தால் நீர் அவனது தூதுச் செய்தியை முற்றிலும் எட்ட வைக்காதது போன்றே அது இருக்கும். மக்களின் தீங்கிலிருந்து அல்லாஹ் உம்மைப் பாதுகாப்பான். நிராகரிக்கின்ற மக்களுக்கு அல்லாஹ் ஒருபோதும் (வெற்றியின்) வழியை காட்ட மாட்டான். (5:68)

இன்றிலிருந்து 1400 வருடங்களுக்கு முன்னர் உலகின் நாலாப்புறமும் வழிகேட்டில் மூழ்கியிருந்தது. திருக்குர்ஆன் இந்தக் காட்சியை ظَهَرَ الۡفَسَادُ فِى الۡبَرِّ وَالۡبَحۡرِ அதாவது கரையும் கடலும் குழப்பத்தில் இருந்தது (30:42) என்ற சொற்களால் படம் பிடித்துக் காட்டுகின்றது. அதாவது வேதம் கிடைக்கப் பெற்றவர்களும், வேதம் கிடைக்கப் பெறாதவர்களும் ஆகிய இருவரிடமுமே குழப்பம் நிலவியது. குறிப்பாக அரபு தீபகற்பமானது தனிப்பட்ட அளவிலும், ஒட்டுமொத்த அளவிலும் நல்லொழுக்கத்தின் அடிப்படையிலும், ஆன்மிக அடிப்படையிலும் மிகவும் இருள் நிறைந்த காலகட்டத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தது. அவர்களில் நல்லவர் யார்? தீயவர் யார்? கருப்பு எது? வெள்ளை எது? என்ற எந்தவொரு வித்தியாசத்தையும் பார்க்க முடியாத நிலை இருந்தது.

தொன்மையிலேயே இறை இல்லமான கஃபாவின் நிலை எவ்வாறிருந்தது என்றால் இறைவனை வணங்குவதற்காக கட்டப்பட்ட அந்த வீட்டில் நாள்தோறும் ஒரு சிலை என வருடம் முழுவதற்குமாக 360 சிலைகள் வைத்து வணங்கப்பட்டு வந்தன. சண்டை சச்சரவுகள், கொலை, கொள்ளை, வெட்கங்கெட்ட நிலை, தீய செயல்கள், மது அருந்துதல், விபச்சாரம் ஆகியவை அன்றாடம் இருந்து வருகின்ற சாதாரண நிலையாக இருந்தன. அரபு சமுதாயம் என்பது சில கோத்திரங்கள் ஒன்றிணைந்ததன் பெயராக இருந்தது. அக்கோத்திரங்கள் எந்தவொரு அரசாங்கத்திற்கும் சட்டத்திற்கும் கட்டுப்பட்டு நடக்கவில்லை. சட்டத்தைப் பேணியவாறு எவருக்கும் கீழ் இருப்பதையும் எவருக்கும் கட்டுப்பட்டு நடப்பதையும் அவர்கள் விரும்பியதே இல்லை. அவ்வாறு அவர்கள் இருந்ததுமில்லை.

இந்த இருள் நிறைந்த காலகட்டத்தில் வேதனையுள்ள ஒரு உள்ளம் தனது சமுதாயத்தில் நிலவி வரும் தீமைகளையும், வழிகேடுகளையும் கண்டு நிம்மதியிழந்த நிலையில் இருந்தது. வானத்திலிருந்து வரும் ஒளியைப் பெறுவதற்காக ஒரு ஆன்மா துடித்துக் கொண்டிருந்நது. ஒரு 25 வயதுள்ள இளைஞர் இந்த வேதனைகளை உள்ளத்தில் தாங்கியவாறு நிம்மதியைத் தேடியவாறு மக்காவிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள ஹிரா மலையை ஒட்டியிருந்த ஒரு குகையில் தன்னந்தனியாக சென்று தனது இறைவனிடம் தனிமையில் முறையீடு செய்வதற்காக ஒரு தங்குமிடத்தை அங்கு ஏற்படுத்திக் கொண்டார். தொடர்சியாக 15 வருடங்கள் வரை பல நாட்கள் அங்கு தங்கியிருந்து தனிமையில் இரவு பகலாக அவர் துஆக்கள் செய்து வந்தார். இவரே நமது எஜமானரும், மனித குலத்திற்கு பேரருளாகவும், அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாகவும் தோன்றிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

இறுதியில் அல்லாஹ் அவர்களது துஆக்களை ஏற்றுக் கொண்டான். பரிசுத்த ஆவியான ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களை உள்ளத்திற்கும் ஆன்மாவிற்கும் எழுச்சியூட்டக்கூடிய தனது தூய வசனங்களுடன் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தான். பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:


அவர் வானத்திலிருந்து ஒளியைக் கொண்டு வந்தார். சுயமே அவரே ஒரு ஒளியாகத் திகழ்ந்தார். காட்டுமிராண்டிகளின் சமுதாயத்தில் அவர் பிறந்திருந்தாலும் அவரிடம் எந்தக் குறையும் இருக்கவில்லை.

இந்த வானத்து ஒளியின் மூலமாக இருளில் இருப்பவர்களுக்கு ஒளியூட்டுவதற்காகவும், வழிகேட்டின் படுகுழியில் வீழ்ந்து கிடக்கின்ற மனித குலத்தை ஒளிமிக்க மினாராக்களில் அமரச் செய்வதற்காகவும் بَلِّغۡ مَاۤ اُنۡزِلَ اِلَيۡكَ அதாவது முஹம்மதே! இப்போது உமக்கு இறங்குகின்ற திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் மக்கள் கேட்கும்படி செய்வீராக. அதை எழுதுவீராக. அதை மனனம் செய்வீராக. பிறகு திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையையும் செயல்படுத்திக் காட்டுவீராக என்று அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

وَاِنْ لَّمْ تَفْعَلْ فَمَا بَلَّغْتَ رِسَالَتَهُ அதாவது தாங்கள் இந்த புனிதமான கடமையை நிறைவேற்றாமல் இருந்தால் ஒருவகையில் தூதுத்துவத்திற்கான உரிமையையே நீங்கள் நிறைவேற்றாமல் இருக்கின்றீர்கள் என்று இறைவன் அவர்களிடம் கூறினான்.

எனவே இதுவொரு சாதாரண சுமையாக இருக்கவில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் பிறிதோர் இடத்தில் இந்த முழுமை பெற்ற ஷரீஅத்தின் சுமையை சுமக்க வேண்டும் என நாம் வானங்களிடமும், பூமிகளிடமும், மலைகளிடமும் கூறினோம். அதற்காக அவர்களைத் தூண்டினோம்.

فَاَبَيْنَ اَنْ يَّحْمِلْنَهَا وَاَشْفَقْنَ مِنْهَا அதாவது அவை அனைத்தும் இந்த அமானிதத்தை சுமப்பதற்கு மறுத்து விட்டன. இந்த அமானிதத்தின் சுமையை சுமப்பதற்கு அவை அஞ்சின. எனினும், وَحَمَلَهَا الْاِنْسَانُ அதாவது ஒரு முழுமை பெற்ற மனிதர் இந்த அமானிதத்தைத் தமது தலையில் சுமந்து கொண்டார். ஏனென்றால் அவரிடம் சுலூமுன் (தனக்குத் தானே அநீதி இழைத்துக் கொள்பவர்) மற்றும் ஜுஹூலுன் (எதிர்காலத்தில் தனக்கு என்ன நேரும் என்பதை பொருட்படுத்தாமல் இருப்பவர்) என்ற இரு பண்புகள் இருந்தன. அவர் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இவ்வழியில் அவருக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு துன்பத்தையும் தானே சகித்துக் கொள்பவராகவும் அந்தத் துன்பங்களையும் துயரங்களையும் அல்லாஹ்விற்காக மறந்து விடுகின்ற தகுதியை உடையவராகவும் பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.



ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையும் இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பணியிலேயே கழிந்தது. ஸஃபா மலையில் நின்றவாறு குறைஷிய கோத்திரங்களுக்கு இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதிலிருந்து இந்தப் பயணம் ஆரம்பமானது. அது தனது இறுதி ஹஜ்ஜின் போது அரஃபாத் மைதானத்தில் நிகழ்த்திய இறுதி குத்பா பேருரையுடன் நிறைவடைந்தது. மக்காவில் 13 வருடங்களும் மதீனாவில் 10 வருடங்களும் ஆக மொத்தம் 23 வருடங்களின் ஒவ்வொரு நாளும் இந்த விஷயத்திற்கு சாட்சியாக இருக்கின்றது. அதாவது அல்லாஹ்வின் நேசத்திற்குயவரே! நீங்கள் மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்கான உரிமையை நிறைவேற்றி விட்டீர்கள் என்று அந்த நாட்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இப்போது பெருமானார் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையிலிருந்து இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பணி தொடர்பாக நிகழ்ந்த சில சம்பவங்களைக் கூறுகின்றேன். பெருமானார் (ஸல்) அவர்களின் பிரச்சாரமும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற வழிமுறையும் திருக்குர்ஆனின் கட்டளையான اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ அதாவது உமது இறைவனின் வழியில் மக்களை நுட்பமான ஞானத்துடனும், அழகிய போதனைகளுடனும் அழைப்பீராக என்பதன் சிறந்த செயல் அளவிலான முன்மாதிரியாக இருந்தது.

ஹஸ்ரத் அமரு பின் அன்பஸா (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள் : நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் நபி என்று வாதம் செய்த ஆரம்ப காலகட்டத்தில் மக்கா வந்திருந்தேன். அந்த சமயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தூதுத்துவம் தொடர்பாக பகிரங்கமாக அறிவிப்பு செய்யாமல் இருந்தார்கள். ஆனால் நானோ பெருமானார் (ஸல்) அவர்களிடம், நீங்கள் யார்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், நான் நபியாவேன் என்று கூறினார்கள். நபி என்றால் என்ன? என்று நான் கேட்டேன். அதற்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வால் அனுப்படுகின்ற தூதரே நபியாக இருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அல்லாஹ்தான் உங்களை அனுப்பினானா? என்று நான் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம் என்று பதில் கூறினார்கள். அல்லாஹ் உங்களுக்கு என்ன போதனையைத் தந்து அனுப்பியுள்ளான்? என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், அல்லாஹ்வை வணங்க வேண்டும். சிலைகளை கைவிட்டு விட வேண்டும். இரத்த உறவுகளைப் பேணியவாறு அவர்களுக்குள்ள உரிமையை செலுத்த வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு நான், இது மிகவும் நல்ல போதனை தான். மக்களில் எத்தனை பேர் இதனை ஏற்றுக் கொண்டார்கள்? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், சுதந்திரமான நபர் ஒருவரும், ஒரு அடிமையும் இதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். (அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஸைது (ரலி) அவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்). இதைக் கேட்ட அம்ரு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் இங்கிருந்தவாறே உங்களைப் பின்பற்றி நடக்கவா? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை. நீங்கள் உங்களுடைய சமுதாயத்திற்குச் சென்று இந்த போதனைக்கேற்ப செயல்படுங்கள். எனினும் நான் வெளியேறுவது பற்றி (அதாவது ஹிஜ்ரத் செய்வது பற்றி) உமக்குத் தெரிய வந்தால் பிறகு இங்கு வந்து என்னைப் பின்பற்றி நடக்கவும் என்று கூறினார்கள். (பைஹக்கி தொகுதி 2 பக்கம் 39)

இங்கு ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது ஆரம்ப கால தப்லீக்கில் படிப்படியாக பிறருக்குத் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற அம்சம் பெரிதாக நமக்குத் தெரிய வருகின்றது. ஆரம்பத்தில் ஓர் இறைமையையும், தூதுத் துவத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டப்பட்டது. அவ்வாறே மனித இனத்திற்குரிய உரிமையை செலுத்துவதில் முதலில் உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதன் பக்கம் கவனமூட்டப்பட்டது. பிறகு படிப்படியாக பல்வேறு இறைக் கட்டளைகள் இறங்க இறங்க அவற்றின் பக்கம் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறே ஆரம்பத்தில் தனிப்பட்ட முறையில் தனித்தனியாக நபர்களைச் சந்தித்து தப்லீக் செய்யும் பணி நடைபெற்று வந்தது.

அதுவும் கூட பகிரங்கமாக நடைபெறவில்லை. மாறாக, மறைவாகவே தப்லீக் பணி நடைபெற்று வந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களும் கூட சமுதாயத்திலுள்ள நம்பத்தகுந்த நபர்கள் வரை உண்மையின் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற பணியை ஆரம்பித்து வைத்தார்கள். இவ்வாறு ஒரு தீபத்திலிருந்து இன்னொரு தீபம் ஒளிமயமானதாக ஆகிக் கொண்டே சென்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் நபி என்று வாதம் செய்து மூன்று வருடங்கள் கழிந்த பிறகு அல்லாஹ் அவர்களுக்கு இவ்வாறு கட்டளை –யிட்டுள்ளான்:

فَاصۡدَعۡ بِمَا تُؤۡمَرُ وَاَعۡرِضۡ عَنِ الۡمُشۡرِكِيۡنَ அதாவது உமக்கு என்ன கட்டளையிடப்பட்டுள்ளதோ அதைத் தெளிவாக பிறருக்கு எட்ட வைப்பீராக. இணை வைப்பவர்களை விட்டும் நீர் விலகி விடுவீராக. (15:95)

அத்துடன் وَاَنۡذِرۡ عَشِيۡرَتَكَ الۡاَقۡرَبِيۡنَ ۙ அதாவது உமது நெருங்கிய உறவினர்களுக்கு எச்சரிக்கை செய்வீராக (26:215). அதாவது இறைவன் பக்கம் மக்களை அழைக்கின்ற பணியை, இந்தத் திறந்த அழைப்பை உமது உறவினர்களிலிருந்து முதலில் ஆரம்பம் செய்வீராக.

இந்த கட்டளைக்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தத் திட்டத்தை வகுத்தார்கள். அதாவது அதிகாலையில் ஸஃபா மலையில் ஏறி நின்றவாறு குறைஷிய கோத்திரங்களது பெயரைக் குறிப்பிட்டவாறு குரல் கொடுத்து இவ்வாறு அழைத்தார்கள். அப்துல் முத்தலிபின் சந்ததிகளே! அப்துல் மனாஃபின் சந்ததிகளே! குஸ்ஸியின் சந்ததிகளே! என்று பெயர் கூறி அழைத்தார்கள். (அரபு நாட்டில் இந்த வழக்கம் இருந்து வந்தது. ஏதாவது ஒரு துன்பம் வரும் வேளையில் உதவி செய்வதற்காக மக்களை ஒன்று திரட்ட வேண்டுமென்றால் ஏதாவது உயர்வான ஒரு இடத்தில் ஏறி நின்று இவ்வாறு அழைப்பு விடுக்க வேண்டும்).

எவ்வாறிருப்பினும், பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்த மக்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் அழைப்பை கேட்டு ஸஃபா மலைக்கு அருகில் ஒன்று சேர்ந்தனர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்.

நான் உங்களுக்கு எச்சரிக்கை விடுப்பவனாக இருக்கின்றேன். எனக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள உதாரணம் அந்த நபரைப் போன்றதாகும். அந்த நபரோ தன்னை தாக்குகின்ற எதிரி ஒருவரைப் பார்க்கின்றார். தனது குடும்பத்தினரை எச்சரிக்கை செய்கின்றார். அதே சமயத்தில் அவரது குடும்பத்தினர் அவர் கூறுவதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற அபாயமும் அவருக்கு இருக்கின்றது. அதனால் அவர் கூவி கூவி எல்லாரையும் தனக்கு உதவி செய்வதற்காக அழைக்க ஆரம்பித்து விடுகின்றார்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்த மலைக்குப் பின்னால் உங்களைத் தாக்குவதற்காக ஒரு படை தயாராக நிற்கின்றது என்று நான் கூறினால் நான் கூறுவதை நீங்கள் உண்மைப்படுத்துவீர்களா? என்று கேட்டார்கள். அனைவரும் ஒருமித்த குரலில், ஏன் கேட்ட மாட்டோம்? இன்று வரை நீங்கள் பொய் கூறியிருப்பதை ஒருபோதும் நாங்கள் கேட்டதில்லை. நாங்கள் எப்போதும் உங்களை உண்மை கூறுபவராகவே கண்டுள்ளோம் என்று கூறினர். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் உங்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றேன். அவனது தண்டனை தொடர்பாக உங்களை எச்சரிக்கை செய்கின்றேன் என்று கூறினார்கள்.

இந்தத் தூதுச் செய்தியை கேட்டதும் அபூலஹப், தப்பன் லக அ லிஹாதா ஜமஃதனா அதாவது முஹம்மதே! உமக்கு அழிவு ஏற்படட்டும் (நவூதுபில்லாஹ்). இதற்காகவா நீர் எங்களை ஒன்று கூட்டினீர் என்று கூறியவாறு எழுந்து நின்றார். இதைப் பார்த்த ஏனைய மக்களும் சிதறுண்டு போயினர். அங்கிருந்து சென்றும் விட்டனர். (புகாரி கிதாபுத் தஃப்ஸீர் சூரத்துஷ் ஷுஅரா அதிகாரம் 258)

பிறகு தமது உறவினர்களுக்கு தப்லீக் செய்வதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் ஞானம் நிறைந்த ஒரு திட்டத்தை வகுத்தார்கள். விருந்து உண்பதற்கான ஏற்பாட்டைச் செய்து விருந்தில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைத்து விட வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள்.



ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது கட்டளைக்கேற்ப ஆட்டுக்கால் குழம்பையும், ரொட்டிகளையும் தயார் செய்து பனூ முத்தலிப் குடும்பத்தைச் சார்ந்த ஏறக்குறைய 40 நபர்களை விருந்திற்காக அழைத்தார்கள். இவர்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர்களான அபூதாலிப், ஹம்ஸா, அப்பாஸ் மற்றும் அபூலஹப் ஆகியோர் அடங்குவர். உணவு உண்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் பேச ஆரம்பித்த போது அவர்களின் தந்தையின் சகோதரனான அபூலஹப் உம்மீது யாரோ மந்திரம் செய்து விட்டான் என்று கூச்சலிட ஆரம்பித்தான். இதைப் பார்த்த மக்கள் அங்கிருந்து கலைந்து சென்று விட்டனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் மீண்டும் விருந்திற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி கூறினார்கள். அவ்வாறே மீண்டும் விருந்திற்கான ஏற்பாடு

செய்யப்பட்டு பெருமானார் (ஸல்) அவர்களது உறவினர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு உரை நிகழ்த்தினார்கள்:

அப்துல் முத்தலிபின் சந்ததிகளே! இறைவன் மீது ஆணையாக. அரபு நாட்டைச் சார்ந்த எந்தவொரு இளைஞரும் நான் உங்களிடம் கொண்டு வந்திருப்பதைப் போன்ற உயர்ந்த, மகத்துவமிக்க தூதுச் செய்தியை இதுவரை கொண்டு வந்ததில்லை. நான் இந்த தூதுச் செய்தியை உலகம் மற்றும்



மறுமையின் நன்மைக்காக உங்களிடம் கொண்டு வந்திருக்கின்றேன். அதன் பக்கம் உங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று இறைவன் எனக்குக் கட்டளையிட்டுள்ளான். எனவே இவ்விவகாரத்தில் உங்களில் யார் எனக்கு உதவி செய்பவராக இருப்பார்? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

எல்லாரும் அமைதியாக இருந்தனர். சிறு வயது இளைஞரான ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மட்டும் எழுந்து நின்றார்கள். அல்லாஹ்வின் நபியே! நான் உங்களுக்கு உதவி செய்வதற்கு தயாராக இருக்கின்றேன் என்று கூறினார்கள். ஆனால் மற்ற மக்கள் அனைவரும் சிரித்தவாறு எழுந்து நின்றனர். பிறகு அங்கிருந்து சென்று விட்டனர். (தஃப்ஸீர் திபரீ சூரத்துஷ் ஷுஅரா வசனம் வ அன்ஸிர் அஷீரத்தக்கல் அக்ரபீன் தொகுதி 9 பக்கம் 481 பைரூத்தில் வெளிபிடப்பட்டது)

எந்நிலையிலும் இதுவரை தனிப்பட்ட முறையில் அதிகம் அதிகமாக குடும்பத்தைச் சார்ந்த மக்களை ஒன்று திரட்டி தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான முயற்சி செய்யப்பட்டு வந்தது. ஆனால் அதற்குப் பிறகு புதிய முஸ்லிம்கள் ஒன்று கூடக்கூடிய ஒரு தலைமையகம் இருக்க வேண்டும். அங்கு ஒருவர் மற்றவரது நிலைமையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தேவை உணரப்பட்டது.

ஹஸ்ரத் அர்கம் பின் அர்கம் (ரலி) அவர்கள் 11 வது நபராக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களது வீடு ஸஃபா மலையை ஒட்டி இருந்தது. அவர்கள் தமது வீட்டை இதற்காக தந்து விட்டார்கள். முஸ்லிம்களின் முதலாவது பிரச்சார நிலையமாக ஆகுகின்ற நற்பேற்றை அவர்களின் வீடு பெற்றது. இந்த வீட்டில் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொலை செய்யும் எண்ணத்தில் வீட்டிலிருந்து வெளியேறிய ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வழியில் இஸ்லாத்தை ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருந்த தமது சகோதரியையும் அவரது கணவரையும் பார்த்து அவர்களோடு முதலில் சண்டை இட்டார்கள். பிறகு திருக்குர்ஆனின் சூரா தாஹாவின் சில வசனங்களை செவிமடுத்ததன் காரணமாக அவர்களது உள்ளம் எந்த அளவுக்கு உருகிப் போனது என்றால் அவர்கள் அங்கிருந்து வெளியேறி நேரடியாக இந்த விட்டிற்கே அதாவது தாரே அர்கமிற்கே வந்து சேர்ந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்து முஸ்லிமாக ஆனார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் வீரமிக்கவர்களாகவும், பிறர் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நபராகவும் இருந்தார்கள். அவர்கள் முஸ்லிமாக ஆனதும் முஸ்லிம்கள் எழுச்சியுடன் தக்பீர் முழக்கங்களை செய்தனர். அதற்குப் பிறகு பகிரங்கமாக அவர்கள் தப்லீக் செய்ய ஆரம்பித்தனர். (சீரத்துன் நபவிய்யா லி இப்னே ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 343 பைரூத்தில் அச்சிடப்பட்டது)

இப்போது பகிரங்கமாக தப்லீக் செய்ததன் விளைவாக ஒன்றன் பின் மற்றொருவராக சில சுதந்திரமான நபர்களும், அடிமைகளும் முஸ்லிம்களாக மாறினர். ஒரு ஜமாஅத் ஒன்று திரள ஆரம்பித்தது. இதைப் பார்த்த மக்கத்து குறைஷியர்களுக்குத் தமது தலைமை அபாயத்தில் இருப்பது தென்பட ஆரம்பித்தது. ஒருமுறை அபூஜஹ்ல் குறைஷி தலைவர்கள் இருந்த சபையில் இவ்வாறு கூறினான்.

'முஹம்மதின் விவகாரம் வளர்ந்து கொண்டே செல்கின்றது.' இதற்குப் பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களையும் நபித்தோழர்களையும் அமைப்பு ரீதியாக செயல்பட்டவாறு எதிர்க்க ஆரம்பித்தனர். அந்த எதிர்ப்பு வாயளவில் மட்டும் இருக்கவில்லை. மாறாக, எதிரிகள் முஸ்லிம்களுக்கு துன்பங்கள் தர ஆரம்பித்தனர். எவர்கள் அடிமைகளாக இருந்தனரோ அவர்கள் மீது அநீதி இழைப்பதில் அவர்களின் எஜமானர்கள் எல்லை மீறி செயல்பட்டனர். எவர்கள் சுதந்திரமாக இருந்தனரோ மேலும் சமுதாயத்தில் கண்ணியத்திற்குரியவர்களாக கருதப்பட்டு வந்தனரோ அவர்களுக்கும் கூட பல்வேறு வகையான கொடுமைகள் இழைக்கப்பட்டன. அவர்களின் எதிர்ப்புக்கு முதல் இலக்காக பெருமானார் (ஸல்) அவர்களே இருந்தார்கள்.

ஒரு முறை அவர்கள் இறை இல்லமான கஃபாவில் தொழுது கொண்டிருந்த போது அசுத்தங்கள் நிறைந்த ஒட்டகத்தின் குடல் ஒன்றை எதிரிகள் அவர்களின் முதுகில் வைத்து அதைப் பார்த்து எள்ளி நகையாடி சிரித்தனர். ஒரு முறை ஒரு போர்வையினால் பெருமானார் (ஸல்) அவர்களது கழுத்தை நெறித்து அன்னாரைக் கொல்வதற்கு முயற்சி செய்தனர். பலமுறை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு விஷம் கொடுத்து கொலை செய்வதற்கான முயற்சியும் செய்யப்பட்டது. அன்னார் வழியில் சென்று கொண்டிருக்கும்போது அவர்களது தலையில் குப்பைகள் கொட்டப்பட்டன. கடும் சொற்களைப் பயன்படுத்தி இழிவாக பேசி அன்னாரது உள்ளத்தைப் புண்படுத்தும் செயல் தினந்தோறும் நடைபெற்று வந்தது.

எந்நிலையிலும் 13 வருட காலம் வரை மக்காவில் மக்கத்து காஃபிர்களின் எதிர்ப்புகளையும் அவர்கள் இழைத்த

துன்பங்களையும் கொடுமைகளையும் பற்றி கூறுவதாக இருந்தால் அதுவொரு நீண்ட வரலாறாகும். ஆனால் இங்கு இதை கூறுவது அவசியமானதாகும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது தந்தையின் சகோதரரான ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தனது மருமகனின் நன்மை, தூய்மை, இறைவன் பக்கம் மக்களை அழைப்பதில் அவர்களுக்கு இருந்த எழுச்சிமிக்க உணர்வு ஆகியவற்றால் அன்னார் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகி இருந்தார்கள். எனவே எல்லா நிலையிலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக அன்னார் இருந்து வந்தார்கள். இதன் விளைவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து மக்கத்து குறைஷியர்கள் விலகியே இருந்து வந்தனர். இறுதியில் அவர்களும் ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அவர்கள் வழங்கி வரும் ஆதரவை கைவிடுமாறு மிகவும் தெளிவான சொற்களில் எச்சரிக்கை செய்தனர். குறைஷிய தலைவர்களின் ஒரு குழு அபூ தாலிபிடம் சென்று இவ்வாறு கூறினர்:

இப்போது விவகாரம் அதன் உச்சத்தை அடைந்து விட்டது. எங்களைப் பற்றி அசுத்தமானவர்கள், தூய்மையற்றவர்கள், படைப்பினங்களிலேயே மோசமானவர்கள், முட்டாள்கள், ஷய்த்தானின் சந்ததிகள் என்றெல்லாம் கூறப்படுகிறது. நாங்கள் வணங்குபவை தொடர்பாக அவை நரகத்திற்கான எரிபொருள் ஆகும் என்று கூறப்படுகிறது. எங்களது மூதாதையர்களைப் பற்றி அறிவற்றவர்கள் என்று கூறப்படுகிறது. எனவே இப்போது நாங்கள் பொறுமையுடன் இருக்க மாட்டோம். நீங்கள் அவருக்கு உதவி செய்வதிலிருந்து விலகாமல் இருந்தால் பிறகு எங்களுக்கும் வேறு வழியில்லாமல் போய் விடும்.

அபூ தாலிப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை அழைத்து இவ்வாறு கூறினார்கள். எனது மருமகனே! இப்போது உங்களது கடுஞ் சொற்களைக் கேட்டு சமுதாயம் கடுமையான ஆத்திரத்திற்கு உள்ளாகியுள்ளது. விரைவில் உம்மை அவர்கள் அழித்து விடலாம். அத்துடன் என்னையும் அழித்து விடலாம். நீர் அவர்களில் அறிவுள்ளவர்களை முட்டாள் என்று கூறுகின்றீர். அவர்களின் மூதாதையர்களை நீர் படைப்பினங்களிலேயே தீயவர் என்று கூறுகின்றீர். அவர்களது கண்ணியத்திற்குரிய சிலைகளை அவர்கள் அதை வணங்கி வரும் நிலையில் அவற்றை நீர் நரகத்தின் எரி பொருள் என்றும் நரகத்தின் நெருப்பு என்றும் கூறுகின்றீர். பொதுவாக இவர்கள் அனைவரையுமே அசுத்தமானவர்கள் என்றும் ஷய்த்தானின் சந்ததிகள் என்றும் மோசமானவர்கள் என்றும் நீர் கூறுகின்றீர். நான் உமக்காக நன்மையை விரும்பியவாறு இதை கூறுகின்றேன். நீங்கள் உங்கள் நாவை பேணிக் கொள்ளுங்கள். கடுஞ் சொற்களைப் பயன்படுத்துவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யாமல் இருந்தால் சமுதாயத்தை எதிர்க்கின்ற சக்தி எனக்கு இல்லை என்று அபூதாலிப் அவர்கள் கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், என் பெரிய தந்தையே! இது கடுஞ் சொற்களைப் பயன்படுத்துவதாக ஆகாது. மாறாக இப்போது நடைபெறுவதையே நான் கூறுகின்றேன். மேலும் தேவையான விஷயத்தை சரியான சந்தர்ப்பத்தில் நான் கூறியுள்ளேன். இந்தப் பணியை செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கின்றேன். இதனால் எனக்கு மரணிக்க வேண்டியது வந்தால் நான் மகிழ்ச்சியுடன் எனக்காக அந்த மரணத்தை ஏற்றுக் கொள்கின்றேன். எனது வாழ்வு இந்த வழியிலேயே அர்ப்பணமாகி இருக்கின்றது. நான் மரணத்திற்கு அஞ்சியவாறு உண்மையை வெளிப்படுத்துவதில் இருந்தும் என்னைத் தடுத்துக் கொள்ள முடியாது. பெரிய தந்தையே உங்களுக்கு உங்கள் பலவீனம் மற்றும் துன்பத்தை பற்றிய எண்ணம் இருந்தால் பிறகு எனக்கு அடைக்கலம் வழங்குவதிலிருந்தும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்.

இறைவன் மீது ஆணையாக! எனக்கு உங்களது எந்தத் தேவையும் இல்லை. எனக்கு எனது எஜமானனின் கட்டளைகள் எனது உயிரை விட மிகப் பிரியமானதாக இருக்கின்றது. நான் இறைவனின் கட்டளைகளை எட்ட வைப்பதிலிருந்தும் ஒருபோதும் விலகிச் செல்ல மாட்டேன். இவ்வழியில் நான் கொல்லப்பட்டால் மீண்டும் மீண்டும் உயிர் பெற்று எப்போதும் இதே வழியில் மரணிப்பதையே நான் விரும்புகின்றேன். இது அச்சத்திற்குரிய இடமல்ல. மாறாக, எனக்கு இதில் அளவு கடந்த இன்பம் இருக்கின்றது. அதாவது இந்த வழியில் துக்கத்தை சகித்துக் கொள்வதில் இன்பம் இருக்கின்றது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களது முகம் உண்மையுடனும், ஒளிமயமான தோற்றத்துடனும் நிரம்பி காணப்பட்டது. அவர்களது குரலில் அதிகமாக உருக்கம் தென்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவை நிறைவு செய்ததும் அதிலிருந்த உண்மையின் ஒளியைக் கண்டு அபூதாலிபின் கண்களில் அவர்களே அறியாத நிலையில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அப்போது அபூதாலிப் அவர்கள், நான் உங்களது உயர்வான நிலையைப் பற்றி தெரியாதவனாக இருந்தேன். நீங்கள் மகிமைமிக்கவர்களாக இருக்கின்றீர்கள். முற்றிலும் வேறொரு வடிவில் தென்படுகின்றீர்கள். செல்லுங்கள். உங்களது பணியை தொடர்ந்து செய்யுங்கள். நான் உயிருடன் இருக்கும் வரை எனக்கு சக்தி உள்ள வரை நான் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன் என்றும் கூறினார்கள்.

(தொடரும்...)

பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

அவர் வானத்திலிருந்து ஒளியை கொண்டு வந்தார். சுயமே அவரே ஒரு ஒளியாக திகழ்ந்தார். காட்டுமிராண்டிகளின் சமுதாயத்தில் அவர் பிறந்திருந்தாலும் அவரிடம் எந்தக் குறையும் இருக்கவில்லை. இந்த வானத்து ஒளியின் மூலமாக இருளில் இருப்பவர்களுக்கு ஒளியூட்டுவதற்காகவும், வழிகேட்டின் படுகுழியில் வீழ்ந்து கிடக்கின்ற மனித குலத்தை ஒளிமிக்க மினாராக்களில் அமரச் செய்வதற்காகவும் முஹம்மதே! இப்போது உமக்கு இறங்குகின்ற திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் மக்கள் கேட்கும்படி செய்வீராக. அதை எழுதுவீராக. அதை மனனம் செய்வீராக. பிறகு திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையையும் செயல்படுத்திக் காட்டுவீராக என்று அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கட்டளையிட்டான்.

# இறையிருப்பு

## அல்லாஹ்வின் இருப்பின் மீது நம்பிக்கை கொள்வதன் பலன்களும் அதில் உள்ள அருள்களும்

மவ்லவி முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப்
நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் மர்கஸிய்யா ஷுமாலி ஹிந்த் காதியான்

தமிழாக்கம்:
இப்னு வஸீம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

### குற்றங்கள் புரிவதை விட்டும் தவிர்ந்திருத்தல்:

அரசாங்கங்கள் குற்றங்களைத் தடுத்து நிறுத்து -வதற்காக சட்டங்கள் இயற்றுகின்றன. ஆனால், அவை குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதில் முழுமையான முறையில் வெற்றி பெறுவதில்லை. ஆனால், அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்கின்ற மக்களும் சமூகமும் அவனுடைய கட்டளைகளின்படி செயல்படுவதைத் தங்களது கடமையாகக் கருதுகிறார்கள். எந்தவொரு கட்டளையை விட்டும் முகம் திருப்புவதைப் பாவமாகக் கருதுகிறார்கள். அவர்களுடைய உண்மையான எஜமானன் தங்களிடம் கோபித்துக் கொள்ளக் கூடாது என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஒரு தவறைச் செய்யும்போது சட்டம், சட்டரீதியாகப் பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி அல்லாஹ்வால் பிடிக்க முடியும் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். எனவே, அவர்கள் ஒவ்வொரு சின்னஞ்சிறு குற்றத்தைப் புரிவதிலிருந்தும் தவிர்ந்திருக்கிறார்கள். தங்கள் முன் ஓர் உதாரணத்தை எடுத்து வைக்கிறேன்:

சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில் அரேபியர்கள் மது அருந்துவதற்குப் பழக்கப்பட்டிருந்தார்கள். சில கோத்திரங் -களில் ஐந்து வேளைகள் மது அருந்துவதற்கு என குறிப்பாக நிர்ணயிக்கப்பட்டிருந்தன. அதிகமாக மது அருந்துவதில் பெருமைபடுவார்கள். அவர்களுடைய சொந்தக் கவிதைகளில் பெருமையாக அதைப் பற்றிக் கூறுவார்கள். அல்லாஹ் மது அருந்துவதற்குத் தடை விதித்ததும் அதை உடனடியாக விட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு நாள் மதீனாவில் அபூதல்ஹா அவர்களின் வீட்டில் அமர்ந்து தோழர்கள் சிலர் மது அருந்திக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு மதுவை ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். இதற்குள் வீதி வழியாக ஒருவர் இவ்வாறு கூறிக் கொண்டே சென்றார்: ‘இன்றிலிருந்து மது முற்றிலும் ஹராம் ஆக்கப்பட்டு விட்டது என்று கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் மீது வஹீ இறங்கியுள்ளது.’

மது அருந்துபவர்களில் சிலர், ‘இந்த அறிவிப்பு சரியானதா, இல்லையா என்று யாராவது சென்று விசாரித்துப் பாருங்கள்’ என்று கூறினார்கள். ஆனால், மற்ற தோழர்கள், ‘இல்லை, முதலில் மதுப் பானைகளை, பாத்திரங்களை உடைத்து விடுங்கள். பானைகளில் இருக்கும் மதுவைக் கொட்டி விடுங்கள். அதற்குப் பிறகு, விசாரித்துப் பாருங்கள்’ என்று கூறினார்கள். விசாரித்துப் பார்த்ததில் மது அருந்துவது ஹராம் என்பது நிரூபணமானதும் அவர்கள் மது அருந்துவதை ஒரேயடியாக விட்டு விட்டார்கள். எவரும் மீண்டும் அதைப் பற்றிய சிந்தனையைக் கூட மனதில் கொண்டு வரவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் சஹாபா பெருமக்களின் இந்தத் தன்மையை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

تركوالغبوق وبدلوا من ذوقه    ذوق الدعاء بليلة الاحزان

பொருள்: அவர்கள் மதுவை விட்டு விட்டார்கள். அதன் (மூலம் அவர்கள் பெற்ற) இன்பத்தை வேதனை நிறைந்த இரவுகளில் அவர்கள் செய்யும் துஆக்கள் எனும் இன்பமாக மாற்றிக் கொண்டார்கள்.

அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்ளும் மக்களுக்கு இந்தவொரு பெரிய பலனும் பரக்கத்தும் கிடைக்கிறது. அதாவது, அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி உடனடியாக செயல்படுகிறார்கள். தீமைகள், பாவங்கள் மற்றும் குற்றங்கள் ஆகியவற்றில் ஈடுபடுவதை விட்டும் தப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால், மற்றவர்களோ இது போன்ற பலன்கள் மற்றும் பரக்கத்துகளை விட்டும் இழப்பிற்குரியவர்களாக இருக்கிறார்கள்.

### உண்மை பேசுதல்:

அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்பவர் உண்மை பேசுபவராக, உண்மையாளராக இருப்பார். ஆனால், மார்க்கமற்ற, இறைமறுப்பாளரான ஒருவருக்கு உண்மை மற்றும் பொய்யைப் பற்றிய எந்தக் கவலையும் இருக்காது. அல்லாஹ்வின் நம்பிக்கை கொண்ட அடியார் எந்தவோர் ஆபத்து அல்லது இன்னலில் உண்மையைக் கை விடுவதில்லை. ஏனெனில், அவர் அல்லாஹ்வின் இந்தக் கூற்றை முன் நிறுத்துகிறார்:

وَكُوْنُوْا مَعَ الصّٰدِقِيْنَ பொருள்: சாதிக்குகள், அதாவது, உண்மையாளர்களுடன் இணைந்து விடுங்கள். அவர் எந்நிலையிலும் உண்மையாளர்கள் என்ற வட்டத்தில் இருந்து வெளியேற விரும்புவதில்லை. (திருக்குர்ஆன் 9:119)

இது தொடர்பாக ஹஸ்ரத் ஷேக் அப்துல் காதிர் சாஹிப் ஜீலானீ (ரலி) அவர்களின் ஒரு சம்பவம் வரலாற்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

இவர்கள் கல்வி பயில்வதற்காக வீட்டிலிருந்து புறப்படலானபோது இவர்களின் தாயார் 80 அஷ்ர.்.பீகளை இவர்களுடைய கோட்டின் பையில் வைத்து தைத்து விட்டார்கள். தாயார் இவர்களிடம், 'மகனே! பொய் பேசக்கூடாது' என்று அறிவுரை வழங்கினார். ஷேக் அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். ஒரு காட்டைக் கடந்து கொண்டிருக்கையில், திருடர்களும் கொள்ளையர்களும் இவர்களைப் பிடித்து, 'உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது?' என்று கேட்டார்கள்.




அதற்கு ஷேக் அப்துல் காதிர் அவர்கள், "என்னிடம் 80 அஷ்ர.்.பீகள் இருக்கின்றன. அவற்றை என் தாயார் கோட் பையில் வைத்து தைத்து விட்டார்கள். மேலும், 'மகனே! ஒருபோதும் பொய் பேசக்கூடாது. இல்லையேல், எல்லாம் வல்ல அல்லாஹ் கோபித்துக் கொள்வான்' என்று அறிவுரை வழங்கினார்கள்" என்று பதிலளித்தார்கள்.

கோட் பையைக் கிழித்து பார்த்தபோது உண்மையாகவே 80 அஷ்ர.்.பீகள் இருந்தன. திருடர்களின் தலைவன் கூறினான்: நமக்கு நம்முடைய பெற்றோர்களும் பெரியவர்களும் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப உண்மை பேசுமாறு அறிவுரை கூறியிருக்கிறார்கள். ஆனால், நாம் அந்த அறிவுரையின்படி செயல்படவில்லை. அதனால் காடுகளில் சுற்றித் திரிகிறோம்.

அந்தத் தலைவன் அந்தக் கணமே தவ்பா செய்தான். மேலும், இனி அவன் ஒருபோதும் பொய் பேச மாட்டான் என்றும், எப்பொழுதும் உண்மையில் நிலைத்து நிற்பேன் என்றும் உறுதி எடுத்துக் கொண்டான். அவனே அன்னாரின் முதல் சீடனாக ஆனான் என்று கூறப்படுகிறது.

இந்த சம்பவத்திலிருந்து நிரூபணம் ஆவதாவது, ஒரு வழிதவறிய, குற்றம் புரியக்கூடிய மனிதனுக்கும் அல்லாஹ் இருக்கிறான் என்பதிலும், அல்லாஹ்வுக்குக் கட்டுப்படாமல் இருப்பது அவனுடைய கோபம் மற்றும் விருப்பமின்மைக்குக் காரணமாக அமைகிறது என்பதிலும் உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு விடும்போது, அவன் நேர்மை மற்றும் உண்மையின் வழியை மேற்கொண்டு விடுகிறான். மேலும், எவனுக்கு அல்லாஹ்வின் இருப்பின் மீது நம்பிக்கையே இருப்பதில்லையோ அவனால் பொய், ஏமாற்றுதல், லஞ்சம் மற்றும் பாவங்கள் எனும் புதைக்குழியிலிருந்து வெளியே வரவே முடியாது.

இதே போன்ற ஒரு ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலும் காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது நூலான 'அஹ்மதிய்யத் ய.்.னீ ஹகீகீ இஸ்லாம்' என்பதில் கூறுகிறார்கள்:

"ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அஞ்சல் நிலையம் தரப்பிலிருந்து ஒரு வழக்கு தொடரப்பட்டது. அதில் தண்டம் விடுக்கப்படுதல் மற்றும் சிறைபிடித்தல் ஆகிய இரு தண்டனைகளும் கிடைத் -திருப்பதற்கான வாய்ப்பிருந்தது. அக்காலத்தில் அஞ்சல் சட்டங்கள் பரவலாக மீறப்பட்டு வந்தன. எனவே, அஞ்சல் நிலைய அலுவலர்களும், இனி மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஓரிரு நபர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்க வேண்டும் என்று விரும்பினர்.

இதனால் அஞ்சல் நிலையத்தின் ஆங்கிலேய அதிகாரி வழக்கு தொடர்வதற்காகத் தானே நேரில் வருகிறார். அன்னாருக்குத் தண்டனை கிடைக்க வேண்டும் என்று முழு முயற்சி செய்கிறார். அன்னாரால் அனுப்பப்பட்ட பார்சலைத் திறந்தவர் கூறும் சாட்சியமே இந்த வழக்கின் அடித்தளமாக இருந்தது. அந்தப் பார்சலில் ஒரு கடிதம் இருந்தது. கடிதத்தைப் பார்சலில் அனுப்புவது அஞ்சல் சட்டத்தின்படி குற்றமாக இருந்தது.

வழக்கறிஞர்கள் அன்னாரிடம், 'தாங்கள் நான் கடிதத்தைத் தனியாகவே அனுப்பினேன் என்று கூறி விடுங்கள். அதுதான் தாங்கள் தப்பிப்பதற்கான ஒரே வழி' என்று கூறினார்கள். யார் பெயருக்கு அந்தப் பார்சல் அனுப்பப் -பட்டிருந்ததோ அவர் ஒரு பாதிரியாராக இருந்தார். அன்னாருடன் விவாதங்கள் புரிந்திருந்தார். ஒரு வகையில் அன்னாருடன் பகைமை கொண்டிருந்தார். அன்னார் இதைக் காரணமாகக் கூறியிருந்தால், நிச்சயமாக அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும்.

ஆனால், ஹுஸூர் (அலை) அவர்கள் தெளிவாக மறுத்து விட்டார்கள். மேலும், 'நான் உண்மையாகவே கடிதத்தை அனுப்பியிருக்கும்போது எவ்வாறு என்னால் பொய் கூற முடியும்? ஆனால், நான் அ(ந்தக் கடிதத்)தை பார்சலில் உள்ள கட்டுரையுடன் தொடர்புடையதாகக் கருதியதனால் தான் பார்சலில் வைத்தேன்' என்று அன்னார் கூறினார்கள். இந்த விஷயம் மாஜிஸ்ட்ரேட் மீது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அஞ்சல் நிலைய அதிகாரிகள் வற்புறுத்தியும், அவர் அன்னாரை விடுதலை செய்து விட்டார்.

மேலும், இவ்வாறு கூறினார்: ஒருவர் சிறைப்பிடிக்கப்படும் ஆபத்தில் இருக்கின்றார். தமது வாயின் ஒரு சொல்லால் அவரால் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நிலை இருக்கிறது. இருந்தும், அவர் எதையும் பொருட்படுத்தவில்லை; பொய் கூறவில்லை! எனவே, என்னால் இவருக்கு ஒருபோதும் தண்டனை வழங்க முடியாது. (அன்வாருல் உலூம் தொகுதி 8, பக்கம் 206. நூல்: அஹ்மதிய்யத் எ.்.னீ ஹகீகீ இஸ்லாம்)

இந்த சம்பவத்திலிருந்து தெளிவாவதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீதான முழுமையான நம்பிக்கையின் பரக்கத்தால் (உண்மையை மாற்றி) தவறாகக் கூறுவதையும் பொய் கூறுவதையும் விட்டு விலகியிருந்தார்கள். ஆனால், சட்டம் படித்திருந்தவர்கள் (உண்மையை மாற்றி) தவறாகக் கூறுமாறு ஆலோசனை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஹுஸூர் (அலை) அவர்கள் எந்நிலையிலும் இறை சட்டத்தையும், நாட்டின் சட்டத்தையும் ஏற்றுக் கொள்வதிலும், அதன் படி செயலாற்றுவதிலும் பிடிவாதமாக இருந்தார்கள். எனவே, அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வதன் ஒரு பயன் என்னவென்றால், ஒரு மனிதர் தனது நாட்டின் சட்டத்தைக் கடைபிடிக்கின்றார். மேலும், அரசர்களுக்கெல்லாம் அரசனின் கட்டளை என்பதனால் மட்டுமே அதற்கு மாறு செய்வதிலிருந்து தவிர்ந்திருக்கிறார்.

இதுவும் ஓர் உண்மை ஆகும். அதாவது, தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்ளக் கூடிய, அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்கிறோம் என்று வாதம் புரியக் கூடிய மக்களின் ஒரு பெரும் எண்ணிக்கை பொய், ஏமாற்றுதல், லஞ்சம் வாங்குதல் மற்றும் பல்வேறு வகையான குற்றங்களில் மூழ்கியுள்ளதாகத் தென்படுகிறது.

இவ்வாறு 'அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வது குற்றங்கள், பாவங்கள் ஆகியவற்றில் இருந்து தவிர்ந்திருப்பதற்குக் காரணமாக அமையும் என்றால், அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்கிறோம் என்று வாதம் புரியக்கூடிய இந்த முஸ்லிம்கள் ஏன் இந்தப் பாவங்களில் மூழ்கியுள்ளார்கள்?' என்று மார்க்கமற்ற இறைமறுப்பாளர்-களுக்கு ஆட்சேபனை செய்ய (இந்த முஸ்லிம்கள் கூட்டம்) வாய்ப்பளிக்கிறது.

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் இந்தக் கேள்விக்கான பதிலை வழங்கியுள்ளார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"இரு வகையான மக்கள் இருக்கிறார்கள். ஒன்று இறைவனை ஏற்பவர்கள். மற்றொன்று இறைவனை ஏற்காதவர்கள்; இறைமறுப்பாளர்கள் என்று அழைக்கப்படு-பவர்கள். ஏற்றுக் கொள்பவர்களிடமும் இறைமறுப்பின் ஒரு சாயல் உள்ளது. ஏனெனில், அவர்கள் இறைவனை முழுமையான நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றால், பிறகு, இந்த அளவுக்குத் தீமையும், வெட்கக்கேடும் எதனால் பெருகி வருகின்றன?

உதாரணமாக, ஒரு மனிதன் இது உயிர்க்கொல்லி நஞ்சு என்பதை அறிந்திருந்தும், அவனுக்கு விஷ அமிலமோ அல்லது விஷச் செடியோ கொடுக்கப்பட்டால், அதற்காக நீங்கள் அவனுக்கு எவ்வளவு பணத்தாசை காட்டினாலும் சரி, அவன் அதை ஒருபோதும் உண்ண மாட்டான். ஏனெனில், நான் அதை உண்டேன் அழிந்தேன் என்பதில் அவனுக்கு உறுதி-யான நம்பிக்கை இருக்கிறது. பிறகு, பாவங்களால் இறைவன் கோபித்துக் கொள்கிறான் என்பதை மக்கள் அறிந்திருந்தும், ஏன் அந்த விஷக் கோப்பையை அருந்துகிறார்கள்?

பொய் பேசுகிறார்கள், விபச்சாரம் செய்கிறார்கள், துன்பம் தர ஆயத்தமாகி விடுகிறார்கள், 12, 12 அனா (அதாவது, முக்கால் ரூபாய்) மதிப்புள்ள அல்லது ஒரு ரூபாய் மதிப்புள்ள நகைக்காக, அப்பாவிப் பிள்ளைகளைக் கொன்று விடுகிறார்கள். உண்மையான அறிவு மற்றும் முழு உறுதியான நம்பிக்கை உருவான பிறகோ இந்த அளவு அச்சமின்மை, விஷமத்தனம், தற்பெருமை உருவாகி விடுவது சாத்தியமே இல்லை. இதிலிருந்து, இந்தத் தீமை எனும் நஞ்சு, அழிப்பதில், விஷ அமிலம் அல்லது விஷச் செடியின் நஞ்சை விட அதிகமானது என்பது அவர்களுக்கு ஒருபோதும் தெரியாது என்ற விஷயம் தெரிய வந்துள்ளது.

இறைவன் இருக்கிறான் தீமை செய்தால் அவன் கோபித்துக் கொள்கிறான் மேலும், அதன் விளைவாகக் கடுமையான தண்டனை கிடைக்கிறது என்ற விஷயத்தில் அவர்களுக்கு ஈமான் இருந்திருந்தால், அவர்கள் பாவத்தின் மீது வெறுப்பை வெளிப்படுத்தியிருப்பார்கள் தீமைகளை விட்டும் விலகியிருந்திருப்பார்கள். ஆனால், பாவ வாழ்க்கை பொதுவாகிக் கொண்டே செல்கிறது என்பதனாலும், தீமை,

> உண்மைக்கு முன்னால் பொய் எப்படி வளர்ச்சியடைய முடியும்? விலை மதிப்புள்ள இரத்தினங்களுக்கு எதிரில் கற்களுக்கு என்ன மதிப்பு இருக்கின்றது? - ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)

அக்கிரமம், சீர்கேடு ஆகியவற்றின் மீது வெறுப்புக்கு பதிலாக நேசம் அதிகரித்துக் கொண்டே செல்வதனாலும், நான் இதைத்தான் கூறுவேன். அதாவது, இன்றைய காலத்தில் இறைமறுப்பு எனும் மதம் பரவியிருக்கிறது என்பதே உண்மை.

ஒரு பிரிவோ இறைவன் இருக்கிறான் என்று நாவால் கூறுகிறது. ஆனால், ஏற்றுக் கொள்வதில்லை. இன்னொரு பிரிவோ தெளிவாக மறுக்கிறது என்பது மட்டுமே வித்தியாசம். உண்மையில், இரு பிரிவினரும் இணைந்திருக்கிறார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 493)

அறியப்பட்ட உலக வரலாற்றிலிருந்து தெரிய வருவதாவது, எப்பொழுது எல்லாம் மனிதன் அல்லாஹ்வை விட்டு விலகினானோ, அவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை முற்றிலும் செலுத்த மறந்தானோ, அச்சமற்றவனாகி பாவங்களைச் செய்யத் துவங்கினானோ, நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் இடையிலான வித்தியாசம் அவன் பார்வையில் இல்லாமல் போனதோ, அப்பொழுது எல்லாம் அல்லாஹ் தன் புறமிருந்து ஒருவரை அனுப்பி அல்லாஹ்வின் மீதான ஈமானை மீண்டும் உள்ளங்களில் நிலைபெறச் செய்கிறான்.

உதாரணமாக, மே, ஜூன் ஆகிய மாதங்களில் கடுமையான வெயிலால் பூமி வறண்டு போகிறது. அப்பொழுது அல்லாஹ் பருவ காலத்தில் கருணை மழையைப் பொழியச் செய்கிறான். அது மரணித்துப் போன நிலத்தை மீண்டும் ஒருமுறை உயிர்பெறச் செய்து விடுகிறது. தற்காலத்திலும் அல்லாஹ் சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பின்பற்றியவராக சய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை இந்தப் புனித பூமி காதியான் தாருல் அமானில் (அமைதி இல்லமான காதியானில்) தோன்றச் செய்தான். அன்னார் உரக்க பறைசாற்றியவாறும், வேதனை மிகுந்த சொற்களிலும் இவ்வாறு அறிவித்தார்கள்:

நான் இறைவன் மீது எத்தகைய ஈமானை உருவாக்க விரும்புகிறேன் என்றால், எவர் இறைவன் மீது ஈமான் கொள்கிறாரோ அவர் பாவம் எனும் விஷத்திலிருந்து தப்ப வேண்டும். அவருடைய இயல்பிலும் அமைப்பிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டு விட வேண்டும். அவருக்கு மரணம் ஏற்பட்டு அவருக்கு ஒரு புதிய வாழ்வு கிடைக்க வேண்டும். பாவத்தால் இன்புறுவதற்கு பதிலாக, அவருடைய உள்ளத்தில் வெறுப்பு உருவாக வேண்டும். எவருக்கு இந்த நிலை உருவாகி

விடுகிறதோ அவர், ‘நான் இறைவனை அடையாளம் கண்டு கொண்டேன்’ என்று கூறலாம்.

இறைவனைப் பற்றிய ஞானம் இல்லாத இந்த நிலைதான் இந்தக் காலத்தில் ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை இறைவன் நன்கறிவான். மனிதனை இந்த இலக்கை அடையச் செய்யக்கூடிய, அவனிடம் இந்த இயல்பை உருவாக்கக்கூடிய அப்படிப்பட்ட எந்தவொரு மார்க்கமும் இல்லை. நாம் எந்தவொரு குறிப்பிட்ட மதத்தின் மீது எந்தப் பரிதாபமும் கொள்ள முடியாது. இந்த இன்னல் பொதுவாகிறது. இந்த உயிர்க் கொல்லி நோய் பயங்கரமாக பரவியுள்ளது. இறைவன் மீது ஈமான் கொள்வதனால் மனிதன் வானவராகி விடுகிறான். இன்னும் கூறுவதாயின், வானவர்கள் சிரம்பணியக்கூடியவனாக ஆகி விடுகிறான் ஒளிமிகுந்தவனாகி விடுகிறான் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 493, 494)

எல்லாம் வல்ல அல்லாஹ் ஜமாஅத் நபர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆன்மாவிலும் தனது இருப்பு தொடர்பாக ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கையை உருவாக்கி விடுவானாக! அதன் விளைவாக பாவங்களில் மூழ்குவதற்கான சாத்தியக்கூறு எஞ்சி விடாமல் இருக்கட்டுமாக! எல்லாம் வல்ல அல்லாஹ்வின் எண்ணற்ற அருள்கள் மற்றும் பரக்கத்துகளில் இருந்து ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் பலன் பெற்றுக் கொண்டே செல்வாராக! ஆமீன்.

## அஹ்மதிகளிடம் அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களின் வேண்டுகோள்!

இந்த துஆவை செய்வீர்களாயின், ஒரு பாதுகாப்பான கோட்டையில் நுழைந்து விடுவீர்கள். அங்கு ஷைத்தானால் ஒருபோதும் நுழைய முடியாது. (குத்பா ஜும்ஆ 23.08.2024)

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

*(ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ ஸுப்ஹானல்லாஹில் அழீம் அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதி(ன்)வ் வஆலி முஹம்மத்)*

பொருள்: அல்லாஹ் தூயவன். அனைத்துப் புகழுக்கும் உரியவன் அவனே. மகத்துவமிக்க அல்லாஹ் தூயவன். அல்லாஹ்வே! முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரது குடும்பத்தினர் மீதும் பெரும் கருணையையும், அருளையும் இறக்குவாயாக.

DAILY 200 TIMES

اَسْتَغْفِرُ اللهَ رَبِّيْ مِنْ كُلِّ ذَنْبٍ وَّاَتُوْبُ اِلَيْهِ

*(அஸ்தக்ஃபிருல்லாஹ ரப்பி மின் குல்லி ஸ(ன்)ம்பி(ன்)வ் வ அதூபு இலைஹி)*

பொருள்: நான் என் இறைவனிடம் என் பாவங்களுக்காக பாவமன்னிப்புக் கோருகிறேன். அவன் பக்கமே திரும்புகிறேன்.

DAILY 100 TIMES

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

*(ரப்பி குல்லு ஷய்யின் ஹாதிமுக ரப்பி ஃபஹ்பல்னீ வன்ஸுர்னீ வர்ஹம்னீ)*

பொருள்: என் இறைவா! ஒவ்வொன்றும் உனக்குத் தொண்டாற்றுகிறது. என் இறைவா என்னைப் பாதுகாப்பாயாக. எனக்கு உதவி புரிவாயாக. என் மீது கருணை காட்டுவாயாக.

DAILY 100 TIMES

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam